டெரிக் பிரின்ஸ்

சரீரத்தின் உயிர்த்தெழுதல்

Derek Prince Ministries - India

"SAREERATHIN UYIRTHEZHUTHAL"

This book was compiled from the extensive archive of Derek Prince's unpublished materials and edited by the Derek Prince Ministries editorial team.

"RESURRECTION OF THE BODY" (Tamil)

5000/0524/LOP

Published by DPM India
C/o DPM EXIM
A-40, Anna Nagar Main Road,
Sivapragasam Salai, Tennur,
Trichy - 620 017, Tamil Nadu, India.
E-mail: admin@derekprince.in
Phone : 00-91-98430 55414 / 95855 38201/03

ISBN : 978-93-92947-67-4
BK-B108-100-TAM

Derek Prince Ministries - India
www.derekprince.com/ta

Derek Prince
MINISTRIES INDIA

சரீரத்தின் உயிர்த்தெழுதல்

எபிரெயரின் புத்தகத்தில் காணப்படும் கிறிஸ்தவ விசுவாசத்தின் பெரும் அடிப்படைக் கோட்பாடுகளை ஆராயும் சிறு புத்தகங்களின் வரிசையில் இது ஆறாவதாகும். முந்தைய புத்தகங்களில் முதல் நான்கை நாம் ஆராய்ந்தோம்:

- செத்த கிரியைகளுக்கு நீங்கலாக்கும் மனந்திரும்புதல்
- தேவன் பேரில் விசுவாசம்
- ஞானஸ்நானங்களுக்கு அடுத்த உபதேசம்
- கைகளை வைக்குதல்

இந்தத் தொடரின் முந்தைய கையேட்டில், ‘‘காலத்தின் முடிவில்’’என்ற தலைப்பைக் கருத்தில் கொண்டு இறுதி இரண்டு கோட்பாடுகளைப் பற்றிய நமது ஆய்வைத் தொடங்கினோம். அந்த ஆய்வில், வரலாற்றின் முடிவு மற்றும் பூமியில் தேவனுடைய நிரந்தர ஆட்சியை ஸ்தாபித்தல் வரையிலான நிகழ்வுகளைப் பார்த்தோம்.

எவ்வாறாயினும், இந்த காலத்தில் நம் ஒவ்வொருவருக்கும் நம் வாழ்க்கையைத் தாண்டி நாம் சந்திக்கும் தனிப்பட்ட "காலத்தின் முடிவு" ஒன்று உள்ளது. நம் ஒவ்வொருவருக்கும், நாம் நித்தியத்திற்குள் நுழையும் போது இரண்டு இறுதி அனுபவங்கள் உள்ளன. இந்த அனுபவங்கள் எபிரெயர் 6இன் இறுதி இரண்டு கோட்பாடுகள் மற்றும் இந்தத் தொடரின் இறுதி சிறு புத்தகங்களின் பாடங்களாவன: சரீரத்தின் உயிர்த்தெழுதல் மற்றும் நித்திய நியாயத்தீர்ப்பு.

(சரீரத்தின் உயிர்த்தெழுதல் என்று நான் தலைப்பு கொடுத்திருக்கும்) மரித்தோரின் உயிர்த்தெழுதல் என்ற இந்த அடிப்படைக் கோட்பாடு தொடங்கி, நாம் காலத்தின் மண்டலத்திலிருந்து வெளியேறி நித்தியத்திற்குச் செல்கிறோம். நித்தியம் என்பது வெறும் ஒரு மிக நீண்ட காலப்பகுதியை கொண்டிருக்கும் ஒன்றல்ல, மாறாக முற்றிலும் வேறுபட்ட ஒரு மண்டலம், என்பதை தயவு செய்து நினைவில் கொள்ளவும். இது நமது மனித அறிவிற்கு அப்பாற்பட்ட ஒன்று.

முதலில், உயிர்த்தெழுதல் என்ற வார்த்தையின் அர்த்தத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அனஸ்டாசிஸ் (anastasis) என்ற கிரேக்க வார்த்தையின் அர்த்தம் 'எழுந்து நிற்பது' என்பதாகும். எனவே, உயிர்த்தெழுதல் என்பது மரணத்திலிருந்தும் கல்லறையிலிருந்தும் எழுந்து நிற்கிறதாகும்.

இந்த ''எழுந்து நிற்பதில்'' என்ன உட்பட்டிருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள, நாம் 1 தெசலோனிக்கேயர் 5:23-24இல்

தொடங்குகிறோம், இது குறிப்பாக இயேசுவின் வருகைக்கு நாம் தயாராக இருப்பதைக் குறிக்கிறது:

> **சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி ஆத்துமா சரீரம்முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக. உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார்.**
>
> **1 தெசலோனிக்கேயர் 5:23-24**

இந்த வசனத்தில், மனிதன் ஆவி, ஆத்துமா மற்றும் சரீரம் ஆகிய மூன்று கூறுகளை உள்ளடக்கியிருப்பதைக் காண்கிறோம். சரீரம் மரித்து உயிர்த்தெழும். ஆனால் ஆவியும் ஆத்துமாவும் ஒருபோதும் உயிர்த்தெழுப்பப்பட வேண்டியதில்லை, ஏனென்றால் அவை ஒருபோதும் மரணத்திற்குள் செல்லாது. ஆகையால், நாம் உயிர்த்தெழுதலைப் பற்றி பேசும்போது, நாம் சரீரத்தின் உயிர்த்தெழுதலைப் பற்றி மட்டுமே பேசுகிறோம்.

இதைப் புரிந்துகொள்ள, மரணத்தின்போது நமக்கு என்ன நடக்கிறது என்பதைப் பற்றி வேதம் நமக்குக் காண்பிக்கும் விஷயங்களைப் பார்ப்போம். மரணத்திற்குப் பிறகு என்ன நடக்கிறது என்பது உலகளாவிய அளவில் ஆர்வத்தை தூண்டும் விஷயமாக உள்ளது. ஒருவர் எந்த தேசம் அல்லது கலாச்சாரத்தைச் சேர்ந்தவர் என்பது முக்கியமில்லை; இறந்த பிறகு என்ன நடக்கிறது என்பதை அறிந்து கொள்வதில் அனைவரும் ஆர்வமாக இருப்பதாக தெரிகிறது.

மரணத்திற்கு பின் என்ன நடக்கிறது

லூக்கா 16ல், மரணத்திற்குப் பிறகு என்ன நடக்கிறது என்பதை இயேசு நமக்கு சித்தரித்து தருகிறார். வேதத்தின் இந்தப் பகுதி ஒருபோதும் உவமை என்று அழைக்கப்படவில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். உவமை என்பது ஒரு உண்மை அல்லது பாடத்தை முன்வைக்கப் பயன்படுத்தப்படும் ஒரு கற்பனை இலக்கிய சாதனம். இருப்பினும், இயேசு இந்த சம்பவத்தை உவமையாகக் கூறவில்லை, மாறாக உண்மையில் நடந்த ஒரு நிகழ்வாகக் கூறுகிறார்.

ஐசுவரியமுள்ள ஒரு மனுஷன் இருந்தான்; அவன் இரத்தாம்பரமும் விலையேறப்பெற்ற வஸ்திரமும் தரித்து, அநுதினமும் சம்பிரமமாய் வாழ்ந்துகொண்டிருந்தான். லாசரு என்னும் பேர்கொண்ட ஒரு தரித்திரனும் இருந்தான்; அவன் பருக்கள் நிறைந்தவனாய், அந்த ஐசுவரியவானுடைய வாசலருகே கிடந்து, அவனுடைய மேஜையிலிருந்து விழுந் துணிக்கைகளாலே தன் பசியை ஆற்ற ஆசையாயிருந்தான்; நாய்கள் வந்து அவன் பருக்களை நக்கிற்று. பின்பு அந்தத் தரித்திரன் மரித்து, தேவதூதரால் ஆபிரகாமுடைய மடியிலே கொண்டுபோய் விடப்பட்டான்; ஐசுவரியவானும் மரித்து அடக்கம் பண்ணப்பட்டான். பாதாளத்திலே அவன் வேதனைப்படுகிறபோது, தன் கண்களை ஏறெடுத்து, தூரத்திலே ஆபிரகாமையும் அவன் மடியிலே லாசருவையும் கண்டான். அப்பொழுது அவன்: தகப்பனாகிய ஆபிரகாமே, நீர் எனக்கு இரங்கி, லாசரு தன் விரலின்

நுனியைத் தண்ணீரில் தோய்த்து, என் நாவைக் குளிரப்பண்ணும்படி அவனை அனுப்பவேண்டும்; இந்த அக்கினிஜுவாலையில் வேதனைப்படுகிறேனே என்று கூப்பிட்டான். அதற்கு ஆபிரகாம்: மகனே, நீ பூமியிலே உயிரோடிருக்குங் காலத்தில் உன் நன்மைகளை அனுபவித்தாய், லாசருவும் அப்படியே தீமைகளை அநுபவித்தான், அதை நினைத்துக்கொள்; இப்பொழுது அவன் தேற்றப்படுகிறான், நீயோ வேதனைப்படுகிறாய். அதுவுமல்லாமல், இவ்விடத்திலிருந்து உங்களிடத்திற்குக் கடந்து போகவும், அவ்விடத்திலிருந்து எங்களிடத்திற்குக் கடந்துவரவும் மனது உள்ளவர்களுக்குக் கூடாதபடிக்கு, எங்களுக்கும் உங்களுக்கும் நடுவே பெரும்பிளவு உண்டாக்கப்பட்டிருக்கிறது என்றான். அப்பொழுது அவன்: அப்படியானால், தகப்பனே, எனக்கு ஐந்து பேர் சகோதரருண்டு, அவர்களும் வேதனையுள்ள இந்த இடத்துக்கு வராதபடி, அவன் போய் அவர்களுக்குச் சாட்சியாக அறிவிக்கும் பொருட்டு, நீர் அவனை என் தகப்பன் வீட்டுக்கு அனுப்பும்படி உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான். ஆபிரகாம் அவனை நோக்கி: அவர்களுக்கு மோசேயும் தீர்க்கதரிசிகளும் உண்டு, அவர்களுக்கு அவர்கள் செவிகொடுக்கட்டும் என்றான். அதற்கு அவன்: அப்படியல்ல, தகப்பனாகிய ஆபிரகாமே, மரித்தோரிலிருந்து ஒருவன் அவர்களிடத்திற்குப் போனால் மனந்திரும்புவார்கள் என்றான். அதற்கு அவன்: அவர்கள் மோசேக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் செவிகொடாவிட்டால், மரித்தோரிலிருந்து

ஒருவன் எழுந்துபோனாலும், நம்ப மாட்டார்களென்று சொன்னான் என்றார்.

லூக்கா 16:19-31

ஆபிரகாமின் கூற்று அனுபவத்தில் எவ்வளவு உண்மை என்பதை அனுபவம் நிரூபித்தது! மோசேயையும் தீர்க்கதரிசிகளையும் நம்பாதவர்கள், இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தபோதும், என்ன நடந்தது என்பதை அறியவில்லை. சில நேரங்களில் நாம் சில அற்புதமான இயற்கைக்கு அப்பாற்பட்ட வருகையை எதிர்பார்த்து, "அது நடந்தால், நான் உறுதியாக இருப்பேன்" என்று நினைக்கிறோம். ஆனால் தேவன் கூறுகிறார், "உங்களிடம் என் வார்த்தை இருக்கிறது—அதுவே உங்களுக்குத் தேவை. நீங்கள் அதை நம்பி கீழ்ப்படிந்தால், அது உங்களைக் அழைத்துச் செல்லும். இது மிகவும் புனிதமான சிந்தனை.

ஐசுவரியவான் மற்றும் லாசருவின் கதையில் ஐந்து முக்கியமான உண்மைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

முதலாவதாக, மரணத்திற்குப் பிறகும் ஆளுமையின் நிலைத்தன்மை இருந்தது. பணக்காரர் இன்னும் பணக்காரராக இருந்தார், லாசரு இன்னும் லாசருவாகவே இருந்தார். இருவருமே தங்கள் அடையாளங்களை இழக்கவில்லை. சிலர் மரணத்திற்குப் பிறகு எல்லாம் மறைந்துவிடும், எதுவும் இருக்காது என்று கற்பனை செய்கிறார்கள். ஆனால் அது வேதத்தின் அடிப்படையிலானது அல்ல. இறந்த பிறகும் நாம் வாழ்நாளில் வாழ்ந்த அதே ஆளுமையில் தொடர்கிறோம்.

இரண்டாவதாக, நபர்களை அடையாளம் காண முடிந்தது. பணக்காரன் லாசரு மற்றும் ஆபிரகாமை அடையாளம் கண்டுகொண்டான். லாசரு பணக்காரனை அடையாளம் கண்டுகொண்டான்.

மூன்றாவதாக, பூமியில் வாழ்ந்த வாழ்வின் நினைவு இருந்தது. பணக்காரர் மற்றும் லாசரு இருவரும் தாங்கள் இறப்பதற்கு முன் தங்கள் வாழ்க்கையின் சூழ்நிலைகளை நினைவு கூர்ந்தனர்.

நான்காவதாக, அவர்களின் தற்போதைய நிலை பற்றிய உணர்வு அவர்களுக்கு இருந்தது. பணக்காரன் வேதனையில் இருந்தான், அவனது நாக்கு நெருப்பால் சுட்டெரிக்கப்படுகிறது; லாசரு ஆபிரகாமின் மார்பில் ஆறுதலுடனும் அமைதியுடனும் இருந்தார்.

மேலும், ஐந்தாவதாக, நீதிமான்களுக்கும் அநீதி செய்தவர்களுக்கும் இடையே ஒரு முழுமையான பிரிவினை இருந்தது. அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு குறிப்பிட்ட இடம் இருந்தது, மேலும் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு கடந்து செல்ல முடியாமல் இருந்தது.

இந்த ஐந்து அம்சங்களும் முக்கியமானவை மற்றும் அவை இன்று மரணத்திற்குப் பிந்தைய வாழ்க்கையைப் பற்றி கூறப்படும் பிரபலமான பல கோட்பாடுகளுடன் முரண்படுகின்றன.

1. ஆளுமையின் நிலைத்தன்மை இருந்தது- அடையாளத்தை இழக்கவில்லை.
2. நபர்களை அடையாளம் காண முடிந்தது.

3. பூமியில் வாழ்ந்த வாழ்வின் நினைவு இருந்தது.
4. மரணத்திற்குப் பிறகு தற்போதைய நிலைமைகள் பற்றிய உணர்வு இருந்தது.
5. நீதிமான்களுக்கும் அநீதி செய்தவர்களுக்கும் இடையே ஒரு முழுமையான பிரிவினை இருந்தது.

இயேசுவின் மரணத்திற்கு முன்

இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு முன்னும் பின்னும் ஆத்துமாக்களின் விதி ஒன்றல்ல. அந்த ஒரு நிகழ்வு மனித வரலாற்றை இரண்டாகப் பிரித்தது. அவரது மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் இப்பிரபஞ்சத்தின் வரலாற்றில் மிகவும் தீர்க்கமான நிகழ்வாக இருந்தது, மேலும் மரிப்பவர்களுக்கு சம்பவிக்கும் காரியங்களையும் பாதித்தது.

இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலுக்கு முந்தி சம்பவித்த ஐசுவரியவான் மற்றும் லாசருவின் நிகழ்வில், மரிக்கும் அனைத்து ஆத்துமாக்களும் ஷியோல் (எபிரேயத்தில்) மற்றும் ஹேடிஸ் (கிரேக்க மொழியில்) என்ற இடத்திற்குச் சென்றதைக் கண்டோம். ஹேடிஸ் என்ற சொல்லுக்கு "கண்ணுக்கு தெரியாத உலகம்" என்று பொருள்.

எல்லா மக்களும் ஒரே மாதிரியாக, நீதியுள்ளவர்களாக இருந்தாலும் சரி, அநியாயக்காரர்களாக இருந்தாலும் சரி, ஷியோல் அல்லது ஹேடீஸ் என்று அழைக்கப்படும் இந்த கண்ணுக்குத் தெரியாத

பகுதிக்குள் சென்றனர். இது அனைத்து பிரிந்த ஆத்துமாக்களின் இடமாக இருந்தது, ஆனால் நீதிமான்களுக்கும் அநீதியுள்ளவர்களுக்கும் முற்றிலும் தனித்தனியாக இரண்டு பகுதிகள் இருந்தன. எல்லோரும் நீதிமான்களாகவோ அல்லது அநீதியுள்ளவர்களாகவோ இருந்தார்கள் என்பதை கவனிக்கவும் - இடையில் யாரும் இல்லை. பாதி நீதிமானாகவோ, பாதி அநீதியுள்ளவனாகவோ யாரும் இருக்க முடியாது. ஒவ்வொருவரும் அந்த இரண்டு இடங்களில் ஒன்றிலோ மற்றொன்றிலோ முடிவடைய வேண்டும்.

நீதிமான்களுக்கான பகுதி ‘‘ஆபிரகாமின் மார்பு’’ என்று அழைக்கப்பட்டது. அதாவது, விசுவாசிகள் அனைவருக்கும் தந்தையான ஆபிரகாம், அவர்களை அங்கு வரவேற்று ஆறுதல்படுத்தினார் என்று நான் நினைக்கிறேன். அதுதான் என் புரிதல்.

இயேசு மரித்த போது

இருப்பினும், இயேசு மரித்தபோது, மிகவும் ஆழமான மற்றும் எளிதில் புரியாத ஒன்று நடந்தது. நம்மைப் போலவே, ஒரு ஆவி, ஒரு ஆத்துமா மற்றும் ஒரு சரீரம் உடையவராய், இயேசு ஒரு பரிபூரண மனிதராக இருந்தார். இயேசுவின் இறப்பின் போது அவருடைய ஆளுமையில் உள்ள அந்த மூன்று கூறுகளில் ஒவ்வொன்றிற்கும் என்ன நடந்தது என்பது பற்றி வேதம் ஒரு அறிக்கையை அளிக்கிறது. லூக்கா 23 இயேசுவின் ஆவியைப்பற்றி பேசுகிறது:

> **இயேசு: பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று மகா சத்தமாய்க் கூப்பிட்டுச்சொன்னார் (அவர் கூக்குரலிட்டது என்னவென்றால், "முடிந்தது" இப்படிச் சொல்லி, ஜீவனைவிட்டார் (அவர் மரித்தார், காலமானார்).**
>
> **லூக்கா 23:46**

இயேசுவின் ஆவி பிதாவிடம் ஒப்படைக்கப்பட்டது. இது என்னால் விளக்க முடியாத ஒன்று. இது ஒரு உண்மை என்பதினால் நான் இந்த அறிக்கையை செய்கிறேன், ஆனால் இந்த ஒரு விஷயத்தை குறித்து என்னால் மேலும் எந்த விளக்கமும் அளிக்க முடியாது.

இயேசுவின் ஆத்துமாவுக்கு என்ன ஆனது? அப்போஸ்தலர் 2 இல், பெந்தெகொஸ்தே நாளில், பேதுரு 16 ஆம் சங்கீதத்தை, அச்சங்கீதத்தை எழுதிய தாவீதின் அனுபவமாக அல்ல, இயேசுவின் அனுபவமாக மேற்கோள் காட்டினார். சங்கீதம் 16:8-10 இல், தாவீது இயேசுவைப் பற்றி இந்த வார்த்தைகளை எழுதினார்:

> **"அவரைக்குறித்துத் தாவீது: கர்த்தரை எப்பொழுதும் எனக்குமுன்பாக நிறுத்தி நோக்கிக்கொண்டிருக்கிறேன்; நான் அசைக்கப்படாதபடி அவர் என் வலதுபாரிசத்திலே இருக்கிறார்; அதினாலே என் இருதயம் மகிழ்ந்தது, என் நாவு களிகூர்ந்தது, என் மாம்சமும் நம்பிக்கையோடே தங்கியிருக்கும்; என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர், உம்முடைய பரிசுத்தர் அழிவைக்காணவொட்டீர்..."**
>
> **அப்போஸ்தலர் 2:25-27**

இயேசுவின் ஆத்துமா பிரிந்த ஆவிகளின் மண்டலத்தில் இறங்கியது. இது 1 பேதுருவிலும் கூறப்பட்டுள்ளது:

> **ஏனெனில், கிறிஸ்துவும் நம்மை தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார்; அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார். அந்த ஆவியிலே அவர் போய்க் காவலிலுள்ள ஆவிகளுக்குப் பிரசங்கித்தார். அந்த ஆவிகள், பூர்வத்திலே நோவா பேழையை ஆயத்தம் பண்ணும் நாட்களிலே, தேவன் நீடிய பொறுமையோடே காத்திருந்தபோது, கீழ்ப்படியாமற் போனவைகள்; அந்தப் பேழையிலே சிலராகிய எட்டுப்பேர் மாத்திரம் பிரவேசித்து ஜலத்தினாலே காக்கப்பட்டார்கள்.**
>
> **1 பேதுரு 3:18–20**

இயேசு மரித்தவர்களின் காணப்படாத இடமான பாதாளத்திற்குச் சென்றார். அங்கே அவர் ஒரு பிரகடனம் செய்தார். மீண்டும், இதன் விவரங்களை என்னால் விளக்க முடியாது. வேதம் சொல்வதை நாம் அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும். புதிய கிங் ஜேம்ஸ் மொழிபெயர்ப்பில் அவர் ''பிரசங்கித்தார்'' என்று கூறுகிறது. ஆனால் அந்த வார்த்தை உண்மையில் ''பிரகடனம் செய்வது'' என்பதாகும். அவர் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார் என்று அர்த்தமல்ல, மாறாக அவர் ஒரு பிரகடனம் செய்தார்.

என்னுடைய அனுமானம் என்னவென்றால், அவர்: ''இனிமேல், இந்த இடத்தில் நான்தான்

ஆட்சியாளர். மரணம் மற்றும் பாதாளத்தின் சாவிகள் என்னிடம் உள்ளன. இனிமேல், நடக்கிற அனைத்திற்கும் நீதான் எனக்குப் பதில் சொல்ல வேண்டும்.'' (வெளி. 1:18ஐப் பார்க்கவும்.) அது என்னுடைய கோட்பாடு மட்டுமே. இது நம்பத்தகுந்தது என்று நான் நம்புகிறேன், ஆனால் அது தவறாக கூட இருக்கலாம்.

இதற்கிடையில், இயேசுவின் உடல் கல்லறையில் வைக்கப்பட்டது.

யோவானின் நற்செய்தியில், அவர் சிலுவையில் மரித்தபின் அவருடைய சரீரத்திற்கு என்ன நடந்தது என்று வாசிக்கிறோம்:

> **அவர்கள் இயேசுவின் சரீரத்தை எடுத்து, யூதர்கள் அடக்கம்பண்ணும் முறைமையின் படியே அதைச் சுகந்தவர்க்கங்களுடனே சீலைகளில் சுற்றிக் கட்டினார்கள். (உடல் சிதைந்து துர்நாற்றம் வீசும் என்று எதிர்பார்க்கப்படுவதால், அவர்கள் அதிக அளவு சுகந்தவர்க்கங்களை வைத்திருப்பார்கள்.) அவர் சிலுவையில் அறையப்பட்ட இடத்தில் ஒரு தோட்டமும், அந்தத் தோட்டத்தில் ஒருக்காலும் ஒருவனும் வைக்கப்பட்டிராத ஒரு புதிய கல்லறையும் இருந்தது. ...அவ்விடத்திலே இயேசுவை வைத்தார்கள்.**
>
> **யோவான் 19:40–42**

இதை உறுதிப்படுத்தும் வகையில், இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு அப்போஸ்தலர்களும் பெண்களும் எப்படி கல்லறைக்குச் சென்றார்கள் என்ற பதிவையும் யோவான் 20ல் படிக்கலாம். அவருடைய உடல்

எங்கு புதைக்கப்பட்டது என்பதை அவர்கள் அனைவரும் அறிந்திருந்தனர். ஆனால் அவர்கள் அதை விட்டுச்சென்ற இடத்தில் அவருடைய உடலைக் காணவில்லை. அதற்காக, நாம் அனைவரும் தேவனை துதிக்கலாம்!

இயேசுவின் மரணத்தில் அவருடைய முழு ஆளுமைக்கும் என்ன நடந்தது என்பதை இந்த வசனங்களிலிருந்து நாம் பார்க்கலாம்.

அவருடைய ஆவி பிதாவிடம் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

அவரது ஆத்துமா பாதாளத்தில் இறங்கியது, அங்கு அவர் ஒரு பிரகடனம் செய்தார். அநேகமாக மற்றும் பல விஷயங்களையும் செய்தார்.

அவரது உடல் கல்லறையில் வைக்கப்பட்டது.

இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு பின்

இயேசு மரித்தோரிலிருந்து எழுந்தபோது, அவருடைய முழு ஆளுமையும் மீண்டும் ஒன்றுபட்டது. அவர் ஒரு முழுமையான மனிதரானார்: ஆவி, ஆத்துமா மற்றும் சரீரம். இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் மூலம் என்ன நடந்தது என்றால், அது அனைத்து படைப்புகளையும் பாதித்தது மற்றும் அந்த கட்டத்தில் இருந்து மரணத்தின்போது ஆத்துமாவின் விதியையும் தீர்மானித்தது. இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு, நீதிமான்களின் விதி பாதாளத்திற்குச் செல்வது அல்ல, மாறாக வித்தியாசமான மற்றும் மிகவும்

மகிமையான விதிக்கு செல்வதே. வேதத்திலிருந்து இரண்டு உதாரணங்கள் இங்கே.

யூதர்கள் ஸ்தேவானைக் கல்லெறிந்தபோது, அவர் மரணத் தறுவாயில் இருந்தபோது, இந்த வார்த்தைகளை நாம் வாசிக்கிறோம்:

> அவன் (ஸ்தேவான்) பரிசுத்த ஆவியிலே நிறைந்தவனாய், வானத்தை அண்ணாந்துபார்த்து, தேவனுடைய மகிமையையும், தேவனுடைய வலதுபாரிசத்தில் இயேசு(வானவர்) நிற்கிறதையும் கண்டு: அதோ வானங்கள் திறந்திருக்கிறதையும், மனுஷகுமாரன் தேவனுடைய வலதுபாரிசத்தில் நிற்கிறதையும் காண்கிறேன் என்றான். அப்பொழுது அவர்கள் உரத்தசத்தமாய்க் கூக்குரலிட்டுத் தங்கள் காதுகளை அடைத்துக்கொண்டு, ஒருமனப்பட்டு அவன்மேல் பாய்ந்து, அவனை நகரத்துக்குப் புறம்பே தள்ளி, அவனைக் கல்லெறிந்தார்கள். சாட்சிக்காரர் தங்கள் வஸ்திரங்களைக் கழற்றி, சவுல் என்னப்பட்ட ஒரு வாலிபனுடைய பாதத்தினருகே வைத்தார்கள். அப்பொழுது: கர்த்தராகிய இயேசுவே, என் ஆவியை ஏற்றுக்கொள்ளுமென்று ஸ்தேவான் தொழுதுகொள்ளுகையில், அவனைக் கல்லெறிந்தார்கள்.
>
> அப்போஸ்தலர் 7:55–59

அவருடைய ஆவி நேரடியாக இயேசுவிடம் செல்ல வேண்டும் என்று ஸ்தேவான் அறிந்திருந்தார். இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலின் காரணமாக ஏற்பட்ட மாற்றம் இதுவாகும்.

அவனோ, முழங்காற்படியிட்டு: "ஆண்டவரே, இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும்" என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான். இப்படிச் சொல்லி, நித்திரையடைந்தான்.

அப்போஸ்தலர் 7:60

அந்த ஜெபத்தை ஸ்தேவான் ஜெபித்ததால், தர்சு பட்டணத்தானாகிய சவுல் இரட்சிக்கப்பட முடிந்ததென்று நான் நம்புகிறேன். ஸ்தேவான் அவனை அவனுடைய குற்றத்திலிருந்து விடுவிக்கவில்லை என்றால், அவன் ஒருபோதும் இரட்சிக்கப்பட்டிருக்க முடியாது. இது ஒரு அற்புதமான மற்றும் பயமுறுத்தும் எண்ணம்.

நீங்கள் இயேசுவின் இரத்தத்தால் சுத்திகரிக்கப்பட்ட உண்மையான விசுவாசியாக, தேவனுக்காக உண்மையாக வாழ்ந்தால், மரணத்தின் போது உங்கள் ஆவியின் விதி நேரடியாக இயேசுவிடம் ஏறி செல்லும் என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். பவுல் இதை பிலிப்பியர் 1ல் குறிப்பிடுகிறார். எதைத் தேர்ந்தெடுப்பது என்பதும், தொடர்ந்து இங்கு வாழ்வதா அல்லது இந்த வாழ்க்கையை விட்டுவிட்டு இயேசுவோடு இருப்பதா என்பதும் அவருக்குத் தெரியாது இருந்தது. அவர் சொல்கிறார்:

ஏனெனில் இவ்விரண்டினாலும் நான் நெருக்கப்படுகிறேன், தேகத்தைவிட்டுப்பிரிந்து, கிறிஸ்துவுடனேகூட இருக்க எனக்கு ஆசையுண்டு, அது அதிக நன்மையாயிருக்கும்; அப்படியிருந்தும், நான் சரீரத்தில் தரித்திருப்பது உங்களுக்கு அதிக அவசியம்.

பிலிப்பியர் 1:23-24

அந்த நேரத்தில், தான் இறந்தால் கிறிஸ்துவுடன் இருப்பார் என்று பவுல் முழு நிச்சயமாக இருந்தார். இது இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலால் ஏற்பட்ட ஒரு பெரிய மாற்றம்.

மேலும், இயேசுவின் மரணத்தின் போது ஆபிரகாமின் மடியில் இருந்த நீதிமான்களின் ஆத்துமாக்கள் பரலோகத்திற்குள் விடுவிக்கப்பட்டன. மீண்டும், எல்லா விவரங்களையும் என்னால் கூற முடியாது, ஏனென்றால் எனக்கு அவை தெரியாது. வேதம் நமக்கு கூடுதல் தகவல்களை வழங்குகிறது இல்லை. எபேசியர் 4:8ல், பவுல் சங்கீதம் 68:18ஐ மேற்கோள் காட்டி, இயேசுவின் உயிர்த்தெழுதலைப் பற்றி பேசுகிறார்:

> **ஆதலால், அவர் உன்னதத்திற்கு ஏறி, சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கி, மனுஷர்களுக்கு வரங்களை அளித்தார் என்று சொல்லியிருக்கிறார்.**
>
> **எபேசியர் 4:8**

''அவர் உன்னதத்திற்கு ஏறி, சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கி,'' என்ற வார்த்தைகள், அவர் பிரிந்த நீதிமான்களின் ஆத்துமாக்களை விடுவித்து, அவர்களைத் தன்னுடன் பரலோகத்திற்கு அழைத்துச் சென்றதைக் குறிக்கிறது என்பது என் புரிதல் (மற்றும் பல வேத வர்ணனையாளர்கள் இதை ஒப்புக்கொள்கிறார்கள்). பாவத்திற்கான தண்டனை செலுத்தப்படும் வரை இந்த நீதியுள்ள ஆத்துமாக்கள் பரலோகத்திற்குள் விடுவிக்கப்பட முடியாமல் இருந்தது.

இன்னும் செலுத்தப்படாத ஒரு பலியில் அவர்கள் விசுவாசம் வைத்ததால் தேவன் அவர்களை நீதிமான்களாக ஏற்றுக்கொண்டார். வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பலியை அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். இருப்பினும், அந்த பலி உண்மையில் செலுத்தப்படும் வரை-அதாவது, சிலுவையில் இயேசுவின் பலி செலுத்தப்படும் வரை-அவர்கள் விடுவிக்கப்பட முடியாதிருந்தது.

இயேசு தம்மையே பலி செலுத்தின பின், அவர் பாதாளத்திற்குச் சென்றார். ஏதோ ஒரு விதத்தில் பாதாளத்திலிருந்து நீதிமான்களை தம்முடன் பரலோகத்திற்கு அழைத்துச் சென்றார். இதைத்தான் வேதம் குறிப்பிடுகிறது என்று நான் நம்புகிறேன். இந்த பரிசுத்தவான்கள் பாவம் மற்றும் மரணத்தின் கைதிகளாக இருந்தனர். ஆனால் அவர் சிறைப்பட்டவர்களை சிறையாக்கினார். அவர்கள் இயேசுவுக்கும் மற்றும் நீதிக்கும் சிறைகளாக மாறினார்கள். இது, எனக்கு மிகவும் உற்சாகமாக உள்ளது.

இயேசுவின் உயிர்த்தெழுதல் நம்முடையதை உறுதி செய்கிறது

இயேசுவின் உயிர்த்தெழுதல் நமது உயிர்த்தெழுதலின் உத்தரவாதமாகும். இயேசுவின் உயிர்த்தெழுதலைப் பற்றி பவுல் கூறுகிறார்:

> **அவரே (இயேசு) சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்; எல்லாவற்றிலும்**

முதல்வராயிருக்கும்படி (அல்லது முதல் இடம் பெறும்படி), அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்.

கொலோசேயர் 1:18

இயேசுவே தலை; விசுவாசிகளாகிய நாம் சரீரம். இயேசு, மரணத்திலிருந்து முதற்பேறானவராக, முற்றிலும் புதியதோர் படைப்பின் தலைவராக இருக்கிறார். அவர் ஒரு புதிய இனத்தின்-தேவன்/மனிதன் இனத்தின்-தலைவர், இதில் தேவன் மற்றும் மனிதனின் தன்மைகள் ஒரே நபரில் இணைக்கப்பட்டுள்ளன. அவர் சரீரத்தின் தலையாகவும், மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறானவராகவும் இருக்கிறார்.

உயிர்த்தெழுதலை மரணத்திலிருந்து உண்டாகும் ஒரு பிறப்புடன் ஒப்பிடலாம். இயற்கையான பிரசவம் என்பது உயிர்த்தெழுதலின் ஒரு அழகான படம். இயற்கையான பிரசவத்தில், பொதுவாக, முதலில் வெளிப்படும் உடலின் பாகம் தலை. தலை வெளிப்படும் போது, உடலின் மற்ற பகுதிகளும் பின்தொடரப் போகிறது என்பது நமக்குத் தெரியும். அதேபோல, இயேசு தலையாக உயிர்த்தெழுந்ததால், உயிர்த்தெழுதலில் அவரது உடல் அவரைப் பின்பற்றும் என்பதற்கு அதுவே உத்தரவாதம்.

நமக்கான ஒரு முன்மாதிரி

இயேசு தன் சரீரத்தில் உயிர்த்தெழுந்தது நமது உயிர்த்தெழுதலுக்கு ஒரு முன்மாதிரி. பவுல் பிலிப்பியர் 3ல் ''எங்கள் குடியிருப்பு பரலோகத்தில் இருக்கிறது'' (வசனம் 20) என்று

கூறுகிறார். அந்த உண்மை, மீண்டும் பிறந்து இயேசுவுக்காக வாழ அர்ப்பணிப்புடன் நமக்குள் இருப்பவர்களுக்கு பொருந்தும். நாம் இந்த பூமியில் வாழ்கிறோம்—நாம் இங்கே பூமியில் உள்ள ஒரு நாட்டின் குடிமக்கள்—ஆனால் நமது உண்மையான குடியுரிமை பரலோகத்தில் உள்ளது. நீங்கள் ஒரு நாட்டின் குடிமகனாக இருந்தால், உங்கள் குடியுரிமைக்கான சான்றாக அந்த நாட்டிலிருந்து பாஸ்போர்ட் வைத்திருக்க வேண்டும். நமக்கும் ஒரு பாஸ்போர்ட் உள்ளது, அது நம்மை பரலோகத்தின் குடிமக்களாக அடையாளப்படுத்துகிறது—இயேசுவின் இரத்தம்.

> **நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக்கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே, நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்.**
>
> **பிலிப்பியர் 3:20-21**

உண்மையான கிறிஸ்தவர்களின் அடையாளத்தைக் கவனியுங்கள்—நாம் இரட்சகருக்காக ஆவலுடன் காத்திருக்கிறோம்.

"அற்பமான சரீரம்" என்ற சொற்றொடரின் தமிழ் மொழிபெயர்ப்பு ஒரு நேரடி மொழிபெயர்ப்பு அல்ல. நேரடியான மொழிபெயர்ப்பு மிகவும் தெளிவானது:

“அவர் நம்முடைய அவமானத்தின் சரீரத்தை அவருடைய மகிமையின் சரீரத்திற்கு ஒப்பாக மாற்றுவார்.”

நீங்கள் அதை உணராமல் இருக்கலாம், ஆனால் நாம் அவமானத்தின் சரீரங்களில் வாழ்கிறோம். பாவத்தின் காரணமாக நாம் அவமானப்படுத்தப்பட்டுள்ளோம். நீங்கள் எவ்வளவு செல்வந்தராக இருந்தாலும், எவ்வளவு ஆரோக்கியமாக இருந்தாலும், நீங்கள் வாழும் உடலைப் பற்றிய சில உண்மைகள் நீங்கள் ஒரு பாவி என்பதைத் தொடர்ந்து உங்களுக்கு நினைப்பூட்டுகின்றன என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நீங்கள் மிகவும் ஆடம்பரமான உணவு மற்றும் பானங்களை உண்ணலாம், ஆனால் விரைவில் அல்லது பின்னர், பொதுவாக விரைவிலேயே, நீங்கள் கழிப்பறைக்குச் சென்று உங்கள் சிறுநீர்ப்பை மற்றும் உங்கள் குடல்களை காலி செய்ய வேண்டும். நீங்கள் எவ்வளவு செல்வந்தராக இருந்தாலும், எவ்வளவு கண்ணியமாக இருந்தாலும், உங்கள் வாழ்க்கையில் எவ்வளவு உயர்ந்த இடத்தைப் பெற்றிருந்தாலும், இது அவமானத்தின் சரீரம். நீங்கள் மிகச்சிறந்த ஆடைகளை அணியலாம், ஆனால் நீங்கள் கொஞ்சம் சுறுசுறுப்பாகச் செயல்படத் தொடங்கும் போது, உங்களுக்கு வியர்க்கும். அதுதான் அவமானத்தின் சரீரம்.

நாம் ஒவ்வொருவரும் நம்முடைய பாவத்தினால் அவமானப்படுத்தப்பட்ட நிலையில் இருக்கிறோம் என்பதை நம் உடலால் தொடர்ந்து நினைவுபடுத்தப்பட வேண்டும்

என்று தேவன் தீர்மானித்துள்ளார். ஆனால், இயேசு இந்த அவமானச் சரீரத்தை அவருடைய மகிமையின் சரீரத்தின் சாயலாக மாற்றப் போகிறார். அது உற்சாகமானது! இந்த உடல் மாறப் போகிறது, மாற்றத்தின் சில விவரங்களை இந்த சிறு புத்தகத்தில் பின்னர் பார்ப்போம்.

யோவானின் முதல் நிருபத்திலிருந்து மிகவும் பொருத்தமான ஒரு உண்மையைச் சுட்டிக்காட்டுகிறேன். யோவான் கூறுகிறார்:

> **பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்.**
>
> **1 யோவான் 3:2**

வேறு வார்த்தைகளில் கூறுவதானால், நாம் பெறப்போகும் உடலை நாம் இன்னும் பார்க்கவில்லை. ஆனால் அவர் வெளிப்பட்டு, நாம் அவரைப் பார்க்கும்போது, நம் சரீரங்கள் அவருடைய சரீரத்தின் சாயலாக மாற்றப்படும்.

அடுத்த வசனத்தைக் கவனியுங்கள், ஏனென்றால் இது மிகவும் முக்கியமானது:

> **அவர்மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறதுபோல, தன்னையும் சுத்திகரித்துக்கொள்ளுகிறான்.**
>
> **1 யோவான் 3:3**

நாம் உண்மையிலேயே உயிர்த்தெழுதலை எதிர்பார்த்துக் கொண்டிருந்தால், நம்மை நாமே சுத்திகரித்துக் கொள்வோம் என்று யோவான் கூறுகிறார். சுத்திகரிப்பின் அளவுகோல் என்ன? இயேசு. "அவர் சுத்தமுள்ளவராய் இருக்கிறதுபோல."

உயிர்த்தெழுதலை எதிர்நோக்குகிறோம் என்று யாராவது என்னிடம் சொல்லுகிறார்கள் என்றால், அவர்கள் தங்களை மிகவும் தூய்மையாகவும் பரிசுத்தமாகவும் ஆக்கிக்கொள்ள முயல்கிறார்கள் என்பதற்கான எந்த ஆதாரத்தையும் நான் அவர்களிடம் காணவில்லை என்றால், அவர்கள் சுயமாய் ஏமாற்றப்பட்டவர்கள் என்று நான் கூறுவேன். அவர்கள் உண்மையில் உயிர்த்தெழுதலை எதிர்நோக்கவில்லை; அவர்கள் மத மொழியை மட்டுமே பயன்படுத்துகிறார்கள்.

தன்னைத் தூய்மைப்படுத்திக்கொள்வது, அவமானத்தின் சரீரத்திலிருந்து மகிமையின் சரீரத்திற்கு மாறும் இந்த பரிமாற்றத்தை உண்மையிலேயே எதிர்பார்க்கும் ஒவ்வொருவரின் அடையாளமாகும்.

நேரம் இடம் என்பவைகளால் வரையறுக்கப்பட்டதல்ல

நம் உயிர்த்தெழுதல் உடல் இயேசுவின் உடலைப் போல இருக்கும். அவர் நேரம் அல்லது இடத்தால் வரையறுக்கப்படவில்லை என்பதை நற்செய்தி நூல்களின் பதிவில் நாம் கவனித்தோம். அவர் பரலோகத்திற்கு

ஏறி மீண்டும் இறங்க முடிந்தது. அனைத்து கதவுகளும் மூடப்பட்ட ஒரு அறைக்குள் அவர் நுழைய முடிந்தது. அவர் ஒரு நபருக்கு ஒரு வடிவத்திலும் மற்றொரு நபருக்கு மற்றொரு வடிவத்திலும் தோன்றலாம். அவர் ஒரு மாற்றக்கூடிய சரீரத்தை கொண்டிருந்தார். நமக்கும் இதே மாதிரியான சரீரம் நமக்கு இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

விதையின் மாதிரி

மக்கள் கேட்கிறார்கள், "அந்த சரீரம் எப்படி இருக்கும்?" 1 கொரிந்தியர் 15ல் பவுல் அந்தக் கேள்வியைக் கையாளுகிறார்:

> **ஆகிலும், மரித்தோர் எப்படி எழுந்திருப்பார்கள், எப்படிப்பட்ட சரீரத்தோடே வருவார்களென்று ஒருவன் சொல்வானாகில், புத்தியீனனே, நீ விதைக்கிற விதை செத்தாலொழிய உயிர்க்கமாட்டாதே. நீ விதைக்கிறபோது, இனி உண்டாகும் மேனியை விதையாமல், கோதுமை, அல்லது மற்றொரு தானியத்தினுடைய வெறும் விதையையே விதைக்கிறாய். அதற்குத் தேவன் தமது சித்தத்தின்படியே மேனியைக் கொடுக்கிறார்; விதை வகைகள் ஒவ்வொன்றிற்கும் அதததற்கேற்ற மேனியையே கொடுக்கிறார்.**
>
> **1 கொரிந்தியர் 15:35–38**

இங்கு இரண்டு உண்மைகள் இணைந்திருப்பதைக் காண்கிறோம்: தொடர்ச்சி மற்றும் மாற்றம். நீங்கள் ஒரு ஆப்பிள் விதையை தரையில் விதைத்தால், உங்களுக்கு

ஆரஞ்சு கிடைக்காது. விதையின் தன்மையே விதையிலிருந்து வெளிவரும் உயிரின் தன்மையை தீர்மானிக்கிறது. தொடர்ச்சி இருக்கிறது. ஆனால் மாற்றமும் இருக்கிறது. ஆப்பிள் விதையிலிருந்து வெளிவரும் ஆப்பிள் மரம் விதையைப் போல் இல்லை. தொடர்ச்சி இருக்கும், நாமும் அப்படியே இருப்போம்; ஆனால் ஒரு மிகப்பெரிய இயற்கைக்கு மாறான மாற்றம் இருக்கும்.

எது விதைக்கப்படுகிறது என்பது எது எழும்பும் என்பதை தீர்மானிக்கிறது. இருந்தபோதிலும், விளைவது விதைக்கப்பட்டதில் இருந்து முற்றிலும் வேறுபட்டது. நமது உடல்கள் விதைகளாக மண்ணில் புதைக்கப்படுகின்றன —அதே உடல்கள் முற்றிலும் வேறுபட்ட உடல்களாக வெளிப்படும். சரீரத்தின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலில் என்ன நடக்கிறது என்பதற்கான தெளிவான படம் இது.

நான் எப்போதும் விதைகளைப் பற்றி நினைக்கும் போது ஆச்சரியப்படுகிறேன். ஒரு தர்பூசணி விதையைப் பற்றி யோசித்துப் பாருங்கள்—நீங்கள் தரையில் போட்ட ஒரு சிறிய கருப்பு விதை. சிவப்பு சதையுடன் கூடிய அழகான, உருண்டையான தர்பூசணி அதிலிருந்து வெளிவரும் என்று யாரால் நம்ப முடியும்? இது தொடரும் அதிசயம். ஒவ்வொரு முறையும் நாம் ஒரு விதையை விதைக்கும்போது, நாம் ஒரு அதிசயத்தை விதைக்கிறோம்—நம்முடைய உயிர்த்தெழுதலை நினைவுபடுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்ட ஓர் அற்புதம்.

அதே சரீரம்

இயேசு மரித்தோரிலிருந்து எழுந்தார். அவருடைய உடல் சிலுவையில் அறையப்பட்ட அதே உடல் என்பதை அவர் கவனமாக வலியுறுத்தினார்.

லூக்கா 24ல், இயேசு முதன்முதலில் சீஷர்களுக்குத் தோன்றியபோது சீஷர்கள் அனைவரும் மிகவும் பயந்ததைக் காண்கிறோம். உண்மையில் நடந்ததை அவர்களால் நம்பவே முடியவில்லை. ஆனால் இயேசு அவர்களிடம் கூறினார்:

> **''நீங்கள் ஏன் கலங்குகிறீர்கள்; உங்கள் இருதயங்களில் சந்தேகங்கள் எழும்புகிறதென்ன? நான்தான் என்று அறியும்படி என் கைகளையும் என் கால்களையும் பாருங்கள், என்னைத் தொட்டுப்பாருங்கள்...''**
>
> **லூக்கா 24:38-39**

பின்னர் யோவான் 20 இல் இயேசுவின் உயிர்த்தெழுதலின் சரீரத்தை பற்றிய மேலும் ஒரு பதிவு உள்ளது. அது கூறுகிறது:

> **இயேசு வந்து நடுவே நின்று: "உங்களுக்குச் சமாதானம்" என்றார் (ஒரு பாரம்பரிய மத்திய கிழக்கு வாழ்த்து). அவர் இப்படிச் சொல்லித் தம்முடைய கைகளையும் விலாவையும் அவர்களுக்குக் காண்பித்தார். சீஷர்கள் கர்த்தரைக்கண்டு சந்தோஷப்பட்டார்கள்.**
>
> **யோவான் 20:19-20**

இயேசு ஏன் அப்படி செய்தார்? சிலுவையில் அறையப்பட அவர்கள் கண்ட அதே உடல்தான் என்பதை அவர்களுக்குக் காட்ட. இயேசு காட்சி அளித்த முதல் முறை தோமா அங்கு இல்லை என்பது உங்களுக்கு நினைவிருக்கலாம். எனவே தோமா கூறினார், ''அவருடைய கைகளில் ஆணிகளினாலுண்டான காயத்தை நான் கண்டு, அந்தக் காயத்திலே என் விரலைவிட்டு, என் கையை அவருடைய விலாவிலே போட்டாலொழிய விசுவாசிக்கமாட்டேன்.'' ஒரு வாரம் கழித்து இயேசு மீண்டும் தோன்றி தோமாவிடம் கூறினார்:

> **"நீ உன் விரலை இங்கே நீட்டி, என் கைகளைப் பார், உன் கையை நீட்டி, என் விலாவிலே போடு, அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு' என்றார்."**
>
> **யோவான் 20:27**

வேறு வார்த்தைகளில் கூறுவதானால், தோமா தனது கையை அதில் வைக்கக்கூடிய காயம் இன்னும் இருந்தது. அவருடைய கைகளிலும் விலாவிலும், இயேசு சிலுவையில் அறையப்பட்டதற்கான ஆதாரங்களைக் காட்டினார். அது அதே உடல், ஆனால் உருமாறியது என்பதை அவர் மிகவும் தெளிவாக்க விரும்பினார்.

இது மிகவும் முக்கியமானது. ஏனென்றால் நாம் உயிர்த்தெழும்போது, நாம் ஒரு புதிய உடலைப் பெறப்போவதில்லை. நாம் அதே உடலைப் பெறப் போகிறோம். ஆனால் அது மாற்றப்படும்.

ஐந்து குறிப்பிட் மாற்றங்கள்

1 கொரிந்தியர் 15ல் பவுல் நம் உயிர்த்தெழுதல் சரீரத்தில் நிகழவிருக்கும் ஐந்து குறிப்பிட்ட மாற்றங்களைப் பற்றி கூறுகிறார்:

> **மரித்தோரின் உயிர்த்தெழுதலும் அப்படியே இருக்கும். அழிவுள்ளதாய் விதைக்கப்படும், அழிவில்லாததாய் எழுந்திருக்கும்; கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும், மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும்; பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும், பலமுள்ளதாய் எழுந்திருக்கும். ஜென்ம சரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்; ஜென்ம சரீரமுமுண்டு, ஆவிக்குரிய சரீரமுமுண்டு.**
>
> **1 கொரிந்தியர் 15:42–44**

இந்த ஒப்பீடுகளை இன்னும் விரிவாகப் பார்ப்போம். முதலாவது அழிவு. அழிவு என்பது சிதைவு, மற்றும் சிதைவடையும் எதுவும் அழிவுள்ளது. ஆனால் சரீரம் உயிர்த்தெழும்போது அது அழியாததாக இருக்கும். அதாவது, இனி சிதைவடையாது.

இரண்டாவதாக, அது அவமானத்தில் விதைக்கப்படுகிறது, ஆனால் மகிமையில் எழுப்பப்படுகிறது. மனிதன் பாவத்தில் வீழ்ந்தபோது, தேவன் மனிதகுலத்திற்காக உருவாக்கிய அற்புதமான உடல்கள், பாவசுபாவம் தனது இச்சைகளை நிறைவேற்றுவதற்கான வாகனமாக மாறின. தேவனுக்கு மகிமையையும் கனத்தையும் கொண்டு வர பயன்படுத்தப்பட வேண்டிய உடல்கள் அவமானத்தின்

ஊற்றுகளாக மாறின. ஆனால், உயிர்த்தெழுதலில், ஒரு காலத்தில் நமக்கு அவமதிப்பை ஏற்படுத்திய உடல்கள் இயேசுவின் உயிர்த்த உடலின் மகிமையைக் கொண்டிருக்கும், தேவன் மனிதகுலத்தை உருவாக்கிய இறுதி நோக்கங்களை நிறைவேற்றும்.

மூன்றாவதாக, நம் உடல்கள் பலவீனத்தில் விதைக்கப்படுகின்றன. ஆனால் பெலத்தில் உயிர்ப்பிக்கப்படும். சில ஒலிம்பிக் நிகழ்வுகளில் போட்டியிடும் ஒரு பிரபலமான விளையாட்டு வீரரின் வலிமையை குறித்து நாம் ஆச்சரியப்படலாம். இருப்பினும், அந்த அற்புதமான உடல்கள் கூட வரம்புகள் மற்றும் பலவீனங்களுக்கு உட்பட்டவை. உயிர்த்தெழுந்த நமது சரீரங்கள் எவ்வளவு பெலமுள்ளதாக இருக்கும் என்று எனக்குத் தெரியவில்லை. இருப்பினும், அவைகள் உடல் ரீதியாக மட்டுமல்ல, இயற்கைக்கு அப்பாற்பட்ட அர்த்தத்திலும் வல்லமை வாய்ந்தவைகளாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

இறுதியாக, பவுல் ஒரு இயற்கை மற்றும் ஆவிக்குரிய உடலைப் பற்றி பேசுகையில், அவர் என்ன சொல்கிறார் என்பதைப் புரிந்துகொள்வது கடினம். ஆங்கில மொழிபெயர்ப்புகள் பெரிதும் உதவாது.

“இயற்கை” என்பதற்கான கிரேக்க வார்த்தை இங்கே பயன்படுத்தப்பட்டுள்ளது. இது சூக்கிகோஸ் (psuchekos) ஆகும், இது “ஆத்துமா” என்பதற்கான கிரேக்க வார்த்தையிலிருந்து நேரடியாக பெறப்பட்டது, இது சூக் (psuche)

ஆகும். ஒரே ஒரு நியாயமான மொழிபெயர்ப்பு உள்ளது. அது ‘‘ஆத்துமா’’ என்பதாகும். எனவே, இது சிறப்பாக மொழிபெயர்க்கப்பட வேண்டுமானால், ‘‘இது ஆத்துமாவுக்கடுத்த சரீரமாக விதைக்கப்படும்; ஆவிக்குரிய சரீரமாக எழுந்திருக்கும்’’ என்று நாம் மொழிபெயர்க்க வேண்டும். பவுல் ஆவிக்கும் ஆத்துமாவிற்கும் இடையே வேறுபாடு செய்கிறார். சில மொழிகளில் (உதாரணமாக, ஸ்வீடிஷ் மற்றும் டேனிஷ் மொழிகளில்), ‘‘ஆத்துமாவுக்கடுத்த’’ என்பதற்கு ஒரு வார்த்தை உள்ளது. வேதம் கற்பிப்பதை சரியாகக் குறிக்க தமிழிலும் அந்த வார்த்தை இருக்க வேண்டும்.

உதாரணமாக, 1 கொரிந்தியர் 2:14ல் பவுல் எழுதுகிறார், ‘‘ஆத்துமாவுக்கடுத்த மனிதன் தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்.’’ ஆனால் தமிழ் மொழிபெயர்ப்புகள் எல்லாம் ‘‘ஜென்மசுபாவமுள்ள மனிதன்’’ அல்லது ‘‘மானசீக மனிதன்’’ என்று தான் குறிப்பிடுகின்றன. இது ‘‘ஆத்துமாவுக்கடுத்த’’ மற்றும் ‘‘ஆவிக்குரிய’’ என்பவைகளுக்கு இடையிலான இந்த மிக முக்கியமான வேறுபாட்டை மறைக்கிறது.

இவ்வாறு நாம் சரீரம் விதைக்கப்படும் போது அல்லது புதைக்கப்படும்போது, ஒரு ஆத்துமாவுக்கடுத்த சரீரம் என்று நாம் பார்க்கிறோம்; ஆனால் அது ஆவிக்குரிய சரீரமாக எழுப்பப்படுகிறது. இதன் பொருள் என்ன என்பதை என்னால் முழுமையாக விளக்க முடியும் என்று எனக்குத் தெரியவில்லை.

ஆனால் நமது தற்போதைய சரீரத்தில் ஆத்துமாதான் முடிவுகளை எடுக்கின்றது என்று நான் உங்களுக்கு பரிந்துரைக்கிறேன்.

நான் வாசல் வழியாக செல்ல விரும்பினால், ''நாம் கதவு வழியாக செல்வோம்'' என்று என் ஆத்துமா கூறுகிறது, என் கால்கள் கீழ்ப்படிகின்றன. ஒரு விதத்தில், நம் ஆவிகள் வழிநடத்துதலுக்காக நம் ஆத்துமாவைச் சார்ந்திருக்கின்றன. தாவீது தன் ஆத்துமாவிடம் கூறியது உங்களுக்கு நினைவிருக்கும், ''என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி'' **(சங்கீதம் 103:1).**

வேறு வார்த்தைகளில் கூறுவதானால்: ''வாரும், ஆத்துமாவே நீ நகரு!'' தாவீதின் ஆவி கர்த்தரைத் துதிக்க விரும்பியது. ஆனால் அவருடைய ஆத்துமா பதில் கொடுப்பதில் மந்தமாக இருந்தது.

சரியானதைச் செய்ய நம் ஆத்துமாவை நம் ஆவியிலிருந்து தூண்ட வேண்டும். நாம் தேவனை துதிக்க வேண்டும் என்று நமக்குத் தெரியும், ஆனால் நம் ஆத்துமாக்கள் மந்தமானவை. எனவே நாம் அவற்றை தூண்டி எழுப்ப வேண்டும். நம் சரீரம் எழுப்பப்படும் போது, அது ஆவிக்குரிய உடலாக இருக்கும். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், ஆவி நேரடியாக உடலைக் கட்டுப்படுத்தும். எப்படி? எனக்குத் தெரியாது.

பல ஆண்டுகளுக்கு முன்பு டென்மார்க்கில், எனது முதல் மனைவி வசித்து வந்த இடத்தில், ஒரு முடிவெட்டும் மனிதர் இருந்தார், அவர்

மிகவும் எளிமையானவர். ஒரு நாள் அவர் சொன்னார், "நான் ஒரு கனவு கண்டேன். நான் ஒருவிதமான உடலில் இருந்தேன், நான் எங்கு செல்ல வேண்டும் என்று சுட்டிக் காட்டினேன். நான் மேலே செல்ல விரும்பினால், நான் மேலே சுட்டிக்காட்டினேன், நான் மேலே சென்றேன். நான் வலதுபுறம் செல்ல விரும்பினால், வலதுபுறம் சுட்டிக்காட்டினேன்; நான் இடது பக்கம் செல்ல விரும்பினால், இடது பக்கம் சுட்டிக்காட்டினேன். நான் எங்கு சுட்டிக்காட்டினாலும், என் உடல் சென்றது."

இது ஒரு ஆவிக்குரிய சரீரத்தின் விளக்கம் என்று நான் நம்புகிறேன்—அது எப்படி இருக்கும் என்பதற்கான ஒரு சிறிய முன்னோட்டம். நீங்கள் என்ன செய்ய விரும்புகிறீர்களோ அதைச் செய்ய உங்கள் ஆத்துமா மூலம் சரீரத்தை இயக்க வேலை செய்ய வேண்டியதில்லை. உங்கள் ஆவி முடிவுகளை எடுக்கும். அந்த விளக்கத்தை நீங்கள் ஏற்கலாம் அல்லது ஏற்காமல் போகலாம்; அது உங்கள் விருப்பம்.

1 கொரிந்தியர் 15ல் இன்னும் கொஞ்சம் மேலே, பவுல் தொடர்கிறார்:

> **எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளவேண்டும்.**
>
> **1 கொரிந்தியர் 15:52–53**

அழிவுள்ளது "சிதைவுக்கு உட்பட்டது"; சாவுக்கேதுவானது என்பது "மரணத்திற்கு உட்பட்டது." 1 கொரிந்தியர் 15 லிருந்து அந்த இரண்டு பகுதிகளையும் ஒன்றாக எடுத்துக் கொண்டால், நம் உடலில் ஐந்து குறிப்பிட்ட மாற்றங்கள் நிகழும்.

1. *அழிவுள்ளத்தில் இருந்து அழியாததாக—சிதைவுக்கு உட்பட்டது, இனி சிதைவுக்கு உட்பட்டது அல்ல.*
2. *சாவுக்கேதுவானதில் இருந்து சாவாமை உள்ளதாக—மரணத்திற்கு உட்பட்டது, இனி மரணத்திற்கு உட்பட்டது அல்ல.*
3. *அவமானத்திலிருந்து மகிமைக்கு உள்ளதாக புதைக்கப்பட்ட ஒரு உடல் மிகவும் பரிதாபத்திற்குரிய ஒன்று. அப்படித்தான் நாம் அவமானத்திற்கு ஆளாகிறோம். ஆனால் நாம் எழுப்பப்படும்போது, நாம் மகிமையுடன் வருகிறோம்.*
4. *பலவீனத்தில் விதைக்கப்படுகிறது, ஆனால் பலமுள்ளதாய் எழுப்பப்படுகிறது.*
5. *ஆத்துமாவுக்கடுத்த சரீரமாக விதைக்கப்படுகிறது, ஆனால் ஆவிக்குரிய சரீரமாக வெளிப்படுகிறது.*

இயேசுவின் உயிர்த்தெழுதல் அத்தாட்சியளிக்கப்பட்டது

எல்லாம் இந்த உண்மையை சார்ந்தது

இயேசுவின் உயிர்த்தெழுதல் கிறிஸ்தவ கோட்பாட்டின் முற்றிலும் முக்கிய அங்கமாகும்.

அதை ஒதுக்கி வைத்துவிட்டு நம்மை கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்ள முடியாது.

பவுல் கூறுகிறார்:

கிறிஸ்து எழுந்திருக்கவில்லையென்றால் (மரித்தோரிலிருந்து), எங்கள் பிரசங்கமும் விருதா (வீண்), உங்கள் விசுவாசமும் விருதா (வீண்).

1 கொரிந்தியர் 15:14

கிறிஸ்து எழுந்திராவிட்டால், உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும்; நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருப்பீர்கள்.

வசனம் 17

வேறு வார்த்தைகளில் கூறுவதானால், நம்முடைய பாவங்களின் மன்னிப்பு முற்றிலும் இயேசுவின் உயிர்த்தெழுதலுடன் இணைக்கப்பட்டுள்ளது. இயேசு எழுப்பப்படவில்லை என்றால், சுவிசேஷம் பொய்யானது, நம்முடைய விசுவாசம் வீண், நாம் இன்னும் நம் பாவங்களில் இருக்கிறோம்.

இயேசுவின் உயிர்த்தெழுதலின் யதார்த்தத்தை மறுத்த பல புகழ்பெற்ற இறையியலாளர்கள் மற்றும் சாதாரண மக்கள் உள்ளனர். பவுலின் கூற்றுப்படி, அவர்கள் இன்னும் தங்கள் பாவங்களில் இருக்கிறார்கள்; அவர்கள் இரட்சிக்கப்படவில்லை.

முதன்மை அத்தாட்சி: வேதாகமம்

இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு வேதத்தின் சான்றளிப்பைக் கருத்தில் கொள்வோம்.

இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கான முதன்மை ஆதாரம் நேரில் கண்ட சாட்சிகளின் சாட்சியங்கள் அல்ல, மாறாக வேதத்தின் சான்றளிப்பு என்பது ஒரு சுவாரஸ்யமான உண்மை. மனித சாட்சிகளை விட வேதம் முதன்மையானதை எடுத்துக்கொண்டது.

முதலில், இயேசுவின் உயிர்த்தெழுதலை முன்னறிவிக்கும் பழைய ஏற்பாட்டில் உள்ள சில பகுதிகளைக் கருத்தில் கொள்வோம். பேதுரு தனது முதல் நிருபத்தில் எழுதுகிறார்:

> உங்களுக்கு உண்டான கிருபையைக் குறித்துத் தீர்க்கதரிசனஞ்சொன்ன தீர்க்கதரிசிகள் இந்த இரட்சிப்பைக்குறித்துக் கருத்தாய் ஆராய்ந்து பரிசோதனை பண்ணினார்கள்; தங்களிலுள்ள கிறிஸ்துவின் ஆவியானவர் கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகளையும், அவைகளுக்குப் பின்வரும்மகிமைகளையும்முன்னறிவித்தபோது, இன்னகாலத்தைக் குறித்தாரென்பதையும், அந்தக் காலத்தின் விசேஷம் இன்னதென்பதையும் ஆராய்ந்தார்கள். தங்கள் நிமித்தமல்ல, நமதுநிமித்தமே இவைகளைத் தெரிவித்தார்களென்று அவர்களுக்கு வெளியாக்கப்பட்டது; பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினாலே உங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தவர்களைக்கொண்டு இவைகள் இப்பொழுது உங்களுக்கு அறிவிக்கப்பட்டு வருகிறது; இவைகளை உற்றுப்பார்க்கத் தேவதூதரும் ஆசையாயிருக்கிறார்கள்.
>
> 1 பேதுரு 1:10–12

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் மேசியாவின் வருகையைப் பற்றி தீர்க்கதரிசனம் கூறும்போது அவர்களுக்கு ஒரு விசித்திரமான குழப்பம் ஏற்பட்டது. கிறிஸ்துவின் ஆவி அவர்களிடம் இருந்தது, அது மேசியாவின் ஆவி என்று பேதுரு கூறுகிறார். அந்த ஊக்கத்தின் கீழ், அவர்கள் இயேசுவுக்கு நடக்கப்போகும் விஷயங்களை தங்களுக்கு நடப்பது போல பேசினார்கள். ஆனால் அவர்கள் தனிப்பட்ட முறையில் தங்களுக்கு ஒருபோதும் நடக்காத விஷயங்களையும் தீர்க்கதரிசனம் சொன்னார்கள்.

அந்த பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளின் ஸ்தானத்தில் உங்களை வைத்துக்கொள்ளுங்கள், இதை அவர்கள் புரிந்துகொள்வது மிகவும் கடினமாக இருந்திருக்கும் என்பதை நீங்கள் உணர்வீர்கள். அவர்கள் தங்களைப் பற்றி மிகவும் அசாதாரணமான விஷயங்களைச் சொன்னார்கள், ஆனால் இவை உண்மையில் அவர்களுக்கு நடக்காத விஷயங்கள். உதாரணமாக, சங்கீதம் 22 மேசியாவை குறித்த சங்கீதம் என்று அறியப்படுகிறது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், இது மேசியாவின் வெளிப்பாட்டின் விவரம் ஆகும். தாவீது முதல் நபராக பேசுகிறார், அவர் கூறுகிறார்:

> நாய்கள் என்னைச் சூழ்ந்திருக்கிறது; பொல்லாதவர்களின் கூட்டம் என்னை வளைந்துகொண்டது; என் கைகளையும் என் கால்களையும் உருவக் குத்தினார்கள்.
>
> சங்கீதம் 22:16

இந்த நிகழ்வுகள் தாவீதுக்கு நடந்ததில்லை! தாவீது அந்த வார்த்தைகளை எழுதும்போது

எப்படி உணர்ந்தார் என்று நினைக்கிறீர்கள்? அவர் தன்னில் இருந்த கிறிஸ்துவின் ஆவியால் ஈர்க்கப்பட்டார், மேலும் அவர் மேசியாவுக்கு நடக்கும் விஷயங்களைப் பற்றி முதல் நபர் பேச்சு நடையில் பேசினார், ஆனால் தனிப்பட்ட முறையில் அது அவருக்கு ஒருபோதும் நடக்கவில்லை.

இந்த தூதுவர்கள் அதற்கு எப்படி பதிலளித்தார்கள் என்று எனக்குத் தெரியவில்லை, ஆனால் அது மிகவும் குழப்பமாக இருந்திருக்க வேண்டும்.

மற்றொரு உதாரணத்திற்கு ஏசாயாவை எடுத்துக் கொள்ளுங்கள்:

> **அடிக்கிறவர்களுக்கு என் முதுகையும், தாடைமயிரைப் பிடுங்குகிறவர்களுக்கு என் தாடைகளையும் ஒப்புக்கொடுத்தேன்; அவமானத்துக்கும் உமிழ்நீருக்கும் என் முகத்தை மறைக்கவில்லை.**
>
> **ஏசாயா 50:6**

ஏசாயாவின் வாழ்க்கையில் இது நடக்கவே இல்லை; ஆனால் அது இயேசுவை ரோமர்களால் அடிப்பித்ததில் நடந்தது. இருப்பினும், ஏசாயா தனக்கு நேர்ந்தது போல் முதல் நபர் பேச்சு நடையில் எழுதினார்.

இந்த தீர்க்கதரிசிகளில் உள்ள மேசியாவின் ஆவி, பரிசுத்த ஆவியின் மூலம், மேசியாவான இயேசுவுக்கு என்ன நடக்கும் என்று முன்னறிவித்தார், ஆனால் அது அவர்களுக்கு ஒருபோதும் நடக்கவில்லை. அவர்கள் "எப்படிப்பட்ட நேரத்தை" குறித்து பேசுகிறார்கள்

என்று அவர்கள் தேடியது ஆச்சரியமில்லை. இந்த தீர்க்கதரிசன வார்த்தைகளைப் பெறுவதற்கு, இந்த மனிதர்களின் விசுவாசத்தைக் கண்டு நான் ஆச்சரியப்படுகிறேன். அவர்களின் விசுவாசத்திற்காக நான் தேவனுக்கு நன்றி கூறுகிறேன், ஏனென்றால் இது வேதத்தில் முன்னறிவிக்கப்பட்டிருக்கும் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் முதல் உறுதிப்படுத்தல் ஆகும்.

பெந்தெகொஸ்தே நாளில் அப்போஸ்தலனாகிய பேதுருவால் மேற்கோள் காட்டப்பட்ட சங்கீதம் 16இல், இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் பற்றிய மிக அற்புதமான விளக்கத்தை நாம் கொண்டுள்ளோம்:

> **கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன்; அவர் என் வலதுபாரிசத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை.**
>
> **சங்கீதம் 16:8**

அந்த வசனம் தாவீதின் விஷயத்தில் உண்மையாக இருந்திருக்கலாம், ஆனால் அது மேசியாவின் விஷயத்திலும் உண்மையாக இருந்தது. இந்த தூதர்கள் தங்கள் சொந்த அனுபவத்தில் உண்மையாக இருக்கும் சில விஷயங்களை அடிக்கடி பேசுகிறார்கள். ஆனால் பின்னர் அவர்கள் தங்கள் அனுபவத்திற்கு அப்பால் உண்மையில் அவர்களுக்கு நடக்காத ஒன்றை நோக்கி நகர்கிறார்கள். தாவீது 9ம் வசனத்தில் தொடர்கிறார்:

ஆகையால் என் இருதயம் பூரித்தது, என் மகிமை களிகூர்ந்தது; என் மாம்சமும் நம்பிக்கையோடே தங்கியிருக்கும். என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர்; உம்முடைய பரிசுத்தவானை அழிவைக் காணவொட்டீர்.

சங்கீதம் 16:9–10

"நான் அடக்கம் செய்யப்பட்டாலும் உயிர்த்தெழுதலின் நம்பிக்கை எனக்கு இருக்கும்" என்று தாவீது கூறுகிறார். ஆனால் தாவீது தனது சொந்த நம்பிக்கைக்கு அப்பாற்பட்டு, அவர் அனுபவிக்கக்கூடும் என்று நம்புகிறதற்கு அப்பாற்பட்ட ஒன்றைப் பற்றி பேசுகிறார்.

இயேசுவின் உடலைக் குறிப்பிடுகையில், அது ஒருபோதும் சிதைவு அல்லது அழிவை அனுபவிக்காது என்று அவர் எதிர்பார்க்கிறார். இயேசுவின் உடல் கல்லறையில் கணிசமான நேரம் இருந்தபோதிலும், அவர் ஒருபோதும் பாவம் செய்யாததால், அது ஒருபோதும் சிதைவைக் காணாது. சரீரத்திற்குள் அழிவை அனுமதிக்கும் கொடுக்கு பாவமே. பின்னர் தாவீது இறுதி வசனத்தில் கூறுகிறார்:

ஜீவமார்க்கத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்; உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலதுபாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு.

சங்கீதம் 16:11

இயேசு உயிர்த்தெழுந்தபோது இது நிறைவேறியது. அவர் பிதாவின் பிரசன்னத்திற்குத் திரும்பினார். அங்கு நிறைவான மகிழ்ச்சி ஏற்பட்டது.

மற்றொரு உதாரணம் சங்கீதம் 71, ஒரு அற்புதமான சங்கீதம். சங்கீதக்காரன் தேவனிடம் பேசுகிறார், அவர் கூறுகிறார்:

அநேக இக்கட்டுகளையும் ஆபத்துகளையும் காணும்படி செய்த என்னை நீர் திரும்பவும் உயிர்ப்பித்து, திரும்பவும் என்னைப் பூமியின் பாதாளங்களிலிருந்து ஏறப்பண்ணுவீர். என் மேன்மையைப் பெருகப்பண்ணி, என்னை மறுபடியும் தேற்றுவீர்.

சங்கீதம் 71:20

இது எந்த சங்கீதக்காரனுக்கும் நடந்ததில்லை; எனவே அது இயேசுவுக்கு மட்டுமே பொருந்தும். அவர் அடக்கம் செய்யப்பட்டார்; அவர் உயிர்ப்பிக்கப்பட்டார்; அவர் எழுப்பப்பட்டார், அவருடைய மேன்மை பெருகியது. ஒவ்வொரு நாமத்துக்கு மேலாக உயர்ந்த நாமத்திற்கு சொந்தக்காரரானார்.

சங்கீதக்காரனுக்கு அது நடக்கவில்லை. ஆனால் அது இயேசுவுக்கு நடந்தது. அந்தத் தூதர்களில் இருந்த மேசியாவின் ஆவியே, தொடர்ந்து நடக்கவிருக்கும் விஷயங்களை முன்னரே சாட்சியமளித்தது. நீங்கள் இந்த உண்மையை உள்வாங்கத் தொடங்கும் போது, அது இயேசுவின் உயிர்தெழுதலில் உள்ள யதார்த்தத்தின் மிகவும் வல்லமைவாய்ந்த சான்றாகும்.

1 கொரிந்தியர் 15:3-4 இல், சுவிசேஷம் மூன்று உண்மைகளைக் கொண்டுள்ளது என்று பவுல் கூறினார்: இயேசு வேதாகமத்தின்படி மரித்தார், அவர் அடக்கம் பண்ணப்பட்டார், மேலும்

அவர் வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாள் மீண்டும் உயிர்த்தெழுந்தார்.

எந்த வசனத்தில் இயேசு மூன்றாம் நாளில் உயிர்த்தெழுப்பப்படுவதாக கூறியிருக்கிறது என்று நீங்கள் எப்போதாவது யோசித்திருக்கிறீர்களா? என்னால் ஒன்றை மட்டுமே கண்டுபிடிக்க முடிந்தது. அது அந்த சூழலுக்கு அப்பாற்பட்டது என்பதால் இது மிகவும் சுவாரஸ்யமானது. இது ஓசியாவில் காணப்படுகிறது:

> கர்த்தரிடத்தில் திரும்புவோம் வாருங்கள்; நம்மைப் பீறினார், அவரே நம்மைக் குணமாக்குவார்; நம்மை அடித்தார், அவரே நம்முடைய காயங்களைக் கட்டுவார். இரண்டுநாளுக்குப்பின்பு அவர் நம்மை உயிர்ப்பிப்பார்; மூன்றாம் நாளில் நம்மை எழுப்புவார்; அப்பொழுது நாம் அவருடைய சமுகத்தில் பிழைத்திருப்போம்.
>
> ஓசியா 6:1–2

இது மூன்றாம் நாளின் உயிர்த்தெழுதல் பற்றிய மிகத் தெளிவான முன்னறிவிப்பாகும். சுவாரஸ்யமான விஷயம் என்னவென்றால், அது "அவரை" பற்றி ஒருமையில் பேசவில்லை. ஆனால் அது 'நம்மை' பற்றி பன்மையில் பேசுகிறது. இது புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப்படவிருந்த ஒரு ஆழமான உண்மையின் வெளிப்பாடு ஆகும்.

எபேசியர் 2ல், பவுல் இந்த வெளிப்பாட்டைப் பயன்படுத்துகிறார். தீர்க்கதரிசனம் வெறுமனே எதிர்கால நிகழ்வுகளை முன்னறிவிப்பதில்லை. ஆனால் அவற்றின் உண்மையான

முக்கியத்துவத்தைக் காண்பிக்கும் விதத்தில் அது முன்னறிவிக்கிறது. இது அனைத்து உண்மையான விசுவாசிகளைப் பற்றியும் எழுதப்பட்ட ஒரு சிறந்த எடுத்துக்காட்டு:

> **தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே, அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார்; கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள். கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நம்மிடத்தில் வைத்த தயவினாலே, தம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை வருங்காலங்களில் விளங்கச்செய்வதற்காக, கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார்.**
>
> **எபேசியர் 2:4–7**

நாம் மரித்திருந்த காலத்திலும் தேவன் நம்மை நேசித்தார். ஒரு பிணத்தை எத்தனை பேர் நேசிக்க முடியும்? தேவன் மூன்று காரியங்களைச் செய்திருக்கிறார் என்று பவுல் இங்கே குறிப்பிடுகிறார், இவை அனைத்தும் கடந்த காலத்தில். இயேசுவோடு நாம் அடையாளம் காணப்பட்டதன் காரணமாக, நாம் உயிர் பெறுகிறோம், உயிர்த்தெழுப்பப்படுகிறோம், சிங்காசனத்தில் அமர்த்தப்படுகிறோம். அதுதான் நம் விதி.

பவுல் இதை எதிர்காலத்தில் வைக்கவில்லை, ஆனால் நிகழ்காலத்தில் வைக்கிறார். ஏனெனில் இது கடந்த காலத்தில் நிறைவேற்றப்பட்டது.

சாராம்சத்தில், அவர் கூறுகிறார் (நீங்கள் அதைப் பெற முடிந்தால்), “நீங்கள் இப்போது இயேசுவுடன் சிங்காசனத்தைப் பகிர்ந்து கொள்கிறீர்கள்.’’ இது ஓசியா 6:1-2ன் வெளிப்பாடாகும். வேதம் தன்னை எவ்வளவு அற்புதமாக விளக்குகிறது!

இரண்டாம் நிலை அத்தாட்சி: மனித சாட்சிகள்

1 கொரிந்தியருக்கு நாம் திரும்பும்போது, பவுல் மனித சாட்சிகளின் பட்டியலைத் தருகிறார். இது முக்கியத்துவம் அற்றது அல்ல, ஆனால் இது இரண்டாம் நிலை சாட்சிகள்.

> **நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து, கேபாவுக்கும், பின்பு பன்னிருவருக்கும் தரிசனமானார். அதன்பின்பு அவர் ஐந்நூறு பேருக்கு அதிகமான சகோதரருக்கும் ஒரேவேளையில் தரிசனமானார்; அவர்களில் அநேகர் இந்நாள்வரைக்கும் இருக்கிறார்கள், சிலர் மாத்திரம் நித்திரையடைந்தார்கள். பின்பு யாக்கோபுக்கும், அதன்பின்பு அப்போஸ்தலரெல்லாருக்கும் தரிசனமானார். எல்லாருக்கும் பின்பு, அகாலப்பிறவிபோன்ற எனக்கும் தரிசனமானார்.**
>
> **1 கொரிந்தியர் 15:3-8**

இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு சாட்சியாக இருந்தவர்களின் பட்டியல் இது. பெரும்பாலானவர்கள் இன்னும் உயிருடன் இருந்தனர், இது அவரைப் பார்த்தபோது அவர்கள் மிகவும் இளமையாக இருந்திருக்க வேண்டும் என்பதைக் குறிக்கிறது. யூத சட்டத்தின்படி, எந்த இரண்டு நம்பகமான மனிதர்களின் சாட்சியமும் ஒரு நிகழ்வை உண்மையாக நிறுவ போதுமானதாக இருந்தது என்பதை நாம் அறிவோம். ஆனால் இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு தேவன் இரண்டுக்கும் மேற்பட்ட சாட்சிகளைக் கொடுத்துள்ளார்.

தற்செயலாக (இது எனக்கு ஆர்வமாக இருப்பதால் நான் குறிப்பிடுகிறேன்), பவுல் ''அகால பிறவியாக'' அல்லது காலத்துக்கு முன் பிறந்தவராக இயேசுவை பார்த்ததாக கூறுகிறார். நான் நீண்ட காலமாக அதைப் பற்றி யோசித்தேன். ஆனால் இஸ்ரவேலின் இறுதி இரட்சிப்பின் முன்நிழலாக பவுல் இருந்ததாக நான் நம்புகிறேன். ஆனால் பவுல் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பிறந்து விட்டார். அவர் உரிய நேரத்திற்கு புறம்பே பிறந்தார்.

உயிர்த்தெழுதலின் முக்கியத்துவம்

இயேசுவின் உயிர்த்தெழுதலின் முக்கியத்துவத்தை நாம் மிகைப்படுத்த முடியாது. இது இப்பிரபஞ்சத்தின் வரலாற்றில் தீர்க்கமான உண்மை. மனித இனத்தை மட்டுமல்ல, பிரபஞ்சத்தின் முழு வரலாறும் இயேசுவின் உயிர்த்தெழுதலின் உண்மையைச் சுற்றியே சுழல்கிறது.

இயேசுவின் நியாயத்தை தேவன் நிலைப்படுத்துதல்

முதலாவதாக, உயிர்த்தெழுதல் என்பது தேவன் இயேசுவை நியாயப்படுத்துவதாகும். இரண்டு நீதிமன்றங்கள் அவருக்கு மரண தண்டனை விதித்திருந்தன—மதச்சார்பற்ற ரோம நீதிமன்றம் மற்றும் யூத மத சங்கம். இயேசு அடக்கம் செய்யப்பட்டபோது, அவர் அந்தக் கண்டனத்தின் கீழ் இருந்தார். ஆனால் அவர் உயிர்த்தெழுந்தபோது, தேவன் அவருடைய குமாரனை நியாயப்படுத்தினார். இது ரோமரின் புத்தகத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது:

> **இயேசுகிறிஸ்துவைக்குறித்து தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பரிசுத்த வேதாகமங்களில் முன்னே தம்முடைய சுவிசேஷத்தைப் பற்றி வாக்குத்தத்தம்பண்ணினபடி கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவானவர், மாம்சத்தின்படி தாவீதின் சந்ததியில் பிறந்தவரும், பரிசுத்தமுள்ள ஆவியின்படி தேவனுடைய சுதனென்று மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவகுமாரனுமாயிருக்கிறார்.**
>
> **ரோமர் 1:4–5**

''பரிசுத்தமுள்ள ஆவி'' என்ற யூத சொற்றொடர் ''பரிசுத்த ஆவி'' என்று கூறுவதற்கான மற்றொரு வழியாகும். பவுல் கிரேக்க மொழியில் எழுதினார், ஆனால் எபிரேய மொழியில் சிந்தித்தார் என்பதை சில மொழிபெயர்ப்பாளர்கள் உணரவில்லை.

இயேசு கல்லறையிலிருந்து வெளியே வந்தபோது, தேவன் சொன்னார், "அந்த இரண்டு அநியாய முடிவுகளையும் நான் மாற்றிவிட்டேன். நான் என் மகனை நியாயப்படுத்தினேன். அவர் ஒருபோதும் பாவம் செய்யவில்லை. அவரில் மரணத்திற்கு எந்த காரணமும் இல்லை, என் பரிசுத்த ஆவியால் நான் அவரை எழுப்பினேன்."

மீட்பின் அனைத்து முக்கிய நிகழ்வுகளும் தெய்வத்துவத்தின் மூன்று நபர்களையும் உள்ளடக்கியது என்பதைக் குறிப்பிடுவது சுவாரஸ்யமானது.

இயேசுவின் கருத்தரிப்பு பிதாவினால், ஆவியின் மூலமாக, குமாரனைப் பெற்றெடுக்க உண்டானது. (லூக்கா 1:35).

இயேசுவின் ஊழியத்தைப் பற்றி பேதுரு கூறுகிறார். ''நசரேயனாகிய இயேசுவைத் தேவன் (பிதா) பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம்பண்ணினார்'' (அப்போஸ்தலர் 10:38). பிதா குமாரனை ஆவியால் அபிஷேகம் செய்தார்.

இயேசுவின் மரணத்தைப் பற்றி எபிரெயரில் கூறப்படுகிறது, ''நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்து..." (எபிரெயர் 9:14). குமாரன் ஆவியின் மூலம் தம்மையே பிதாவுக்கு ஒப்புக்கொடுத்தார்.

இயேசுவின் உயிர்த்தெழுதலைப் பற்றி, பிதா ஆவியால் குமாரனை எழுப்பினார் என்று வேதம் கூறுகிறது (ரோமர் 8:11; கலாத்தியர் 1:1).

இறுதியாக, பெந்தெகொஸ்தே நாளில் இருந்து ஒரு அறிக்கை: இயேசு பிதாவிடமிருந்து பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெற்று அதைத் தம் சீஷர்கள் மீது ஊற்றினார் (அப்போஸ்தலர் 2:33).

தெய்வத்துவத்தின் திரித்துவம் மீட்பின் ஒவ்வொரு முக்கிய கட்டத்திலும் முழுமையாக ஈடுபட்டுள்ளது. நான் அதை பயபக்தியுடன் கூறினால், மனித இனத்தை சந்திக்க இந்த மகிமையான வருகையில் தெய்வத்துவத்தின் நபர்கள் யாரும் வெளியேற விரும்பவில்லை என்பது போல் இருந்தது.

நாம் உணருவதை விட தேவன் நம்மீது அதிக அக்கறை கொண்டுள்ளார். என்னைப் பொறுத்தவரை, அது நிறைய பேசுகிறது. மீட்பின் செயல்முறையின் ஒவ்வொரு முக்கிய கட்டத்திலும் முழு தெய்வத்துவத்தின் திருத்துவமும் முழுமையாக ஈடுபட்டிருந்தது.

நமது நியாயப்படுத்துதலின் அடிப்படை

இயேசுவின் உயிர்த்தெழுதலே நாம் நியாயப்படுத்தப்படுவதற்கான அடிப்படையாகும். அவர் எழுப்பப்படவில்லை என்றால், நாம் இன்னும் நம் பாவங்களில் இருந்திருப்போம். பவுல் கூறுகிறார்:

> **அவர் நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டும், நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டும் இருக்கிறார்.**
>
> **ரோமர் 4:25**

மீண்டும், இயேசு எழுப்பப்படவில்லை என்றால், நாம் நீதிமானாக்கப்பட முடியாது. நாம் இன்னும் நம் பாவங்களில் இருப்போம்.

பின்னர் பவுல் இரட்சிப்பைப் பற்றி கூறுகிறார்:

> **என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்.**
>
> **ரோமர் 10:9-10**

தேவன் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினார் என்று ஒரு நபர் நம்பவில்லை என்றால், அவன் அல்லது அவள் இரட்சிக்கப்பட முடியாது என்பது தெளிவாகிறது. இது இரட்சிப்புக்கு இன்றியமையாதது. துரதிர்ஷ்டவசமாக, சரீர உயிர்த்தெழுதலில் நம்பிக்கையில்லாத ஏராளமான கிறிஸ்தவர்கள் உள்ளனர். மன்னிக்கப்பட்ட பாவங்களின் அமைதியையும் மகிழ்ச்சியையும் அவர்களில் யாரும் அறிய முடியாது—அவர்கள் சபையில் எந்த பதவியை வகித்தாலும் சரி.

இரட்சிப்பதற்கு கிறிஸ்துவின் வல்லமையின் உத்தரவாதம்

நம்மை இரட்சிக்கும் வல்லமையின் உத்தரவாதமாக கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் இருக்கிறது.

> **மேலும், தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக**

வேண்டுதல்செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்.

எபிரெயர் 7:25

இயேசு இன்னும் கல்லறையில் இருந்தால், அவர் எப்படி நம்மை இரட்சிக்க முடியும்? ஆனால் அவர் தேவனின் வலது பாரிசத்தில் இருப்பதால், அவர் நம்முடைய பாவங்களுக்குப் பரிகாரம் செய்ததால், வானத்திலும் பூமியிலும் உள்ள எல்லா அதிகாரமும் அவருக்குக் கொடுக்கப்பட்டிருப்பதால், அவர் நம்மை "முற்றுமுடிய" இரட்சிக்க முடிகிறது.

யாரோ ஒருமுறை பயன்படுத்திய வாக்கியம் எனக்கு மிகவும் பிரியமாயிருக்கிறது: "சாக்கடை ஆழத்திலிருந்து உச்சபட்சம் வரையில்" இரட்சிப்பதற்கு இயேசுவின் வல்லமைக்கு எல்லையே இல்லை. அவருக்கு எல்லா வல்லமையும் உண்டு.

மீட்பின் நிறைவு

பின்னர்—இது மிகவும் முக்கியமானது—உயிர்த்தெழுதல் என்பது நம் மீட்பின் நிறைவு.

இறுதியில், நமது இலக்கு பரலோகம் அல்ல. நாம் சொர்க்கத்திற்குச் செல்ல முடியும் என்பது அற்புதமானது. ஆனால் அது வெறும் ஒரு நிறுத்தம் மட்டுமே. நமது ஆவிகள் பரலோகத்தில் இருக்கும் போது, நமது உடல்கள் கல்லறையில் இன்னும் சீரழிந்துக் கொண்டிருக்கும். அது ஒரு முழுமையான இரட்சிப்பு அல்ல.

இயேசு முழு மனிதனுக்காக மரித்தார், அவருடைய இரட்சிப்பில் ஆவி, ஆத்துமா மற்றும் சரீரம் ஆகியவை அடங்கும். சரீரத்தின் உயிர்த்தெழுதல் நடைபெறும் வரை இரட்சிப்பு முழுமையடையாது.

பவுல் பிலிப்பியர் 3ல் எழுதுகிறார், அவருடைய முழு வாழ்க்கையின் நோக்கமும் இலக்கும்:

> **இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி, எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும்படிக்கும், அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்; குப்பையுமாக எண்ணுகிறேன்.**
>
> **பிலிப்பியர் 3:10–11**

பவுல் பரலோகம் செல்வதில் அவ்வளவு அக்கறை காட்டவில்லை; மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதலை அடைவதே அவரது இலட்சியமாக இருந்தது. நாம் மரிக்கும் போது நமது ஆவிகள் பரலோகத்திற்கு செல்லும் என்பதற்காக தேவனுக்கு நன்றி. ஆனால் அது மீட்பின் நிறைவு அல்ல, ஏனென்றால் நம் உடல்கள் இன்னும் மீட்கப்படாமல் உள்ளன.

பவுல் உயிர்த்தெழுதலின் மீது தனது பார்வையை வைத்து வல்லமையான ஒன்றை சொல்கிறார்: ‘‘எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத்

தகுதியாகும்படிக்கும்...” அவர் உயிர்த்தெழுதலை அடைவார் என்பதை அவர் சாதாரணமாக எடுத்துக் கொள்ளவில்லை. நாம் உயிர்த்தெழுதலுக்குள் அப்படியே மிதந்து செல்ல முடியும் என்று நாம் கருத முடியாது. நாம் மிதந்து கொண்டிருந்தால், நாம் வேறு எங்காவது முடிவடையலாம். உயிர்த்தெழுதலை அடைய மனஉறுதியும், அர்ப்பணிப்பும் தேவை.

இதைப் போதுமான அளவிற்கு தீவிரமாக எடுத்துக் கொள்ளாத ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்களை நான் சந்திக்கிறேன். உயிர்த்தெழுதலை அடைவார் என்று பவுல் கருதவில்லை என்றால், நாம் எப்படியும் அங்கு சென்றுவிடுவோம் என்று நினைப்பதற்கு நாம் யார்? நாம் பவுலின் அதே ஆவிக்குரிய நிலையில் உள்ளோமா? அநேகமாக இல்லை. ஆனால் பவுல் கூட அதை சாதாரணமாக எடுத்துக் கொள்ளவில்லை.

அவர் அடுத்த வசனத்தில் மீண்டும் கூறினார்:

நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடர்கிறேன். சகோதரரே, அதைப் பிடித்துக்கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை; ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம

அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்.

பிலிப்பியர் 3:12-14

பவுல் ஒற்றை எண்ணம் கொண்டிருந்தார். அவர் சொன்னார் (அவர் பேசும் நேரத்தில்), "நான் இன்னும் வந்து சேரவில்லை. நான் அடையவும் இல்லை." ஆனால், அவர், "நான் செய்வது ஒன்று இருக்கிறது. நான் இலக்கை நோக்கி தொடருகிறேன். எனக்கு ஒரு உயர்ந்த லட்சியமும் உறுதியும் உள்ளது—மரித்தவர்கள் கிறிஸ்துவுக்குள் உயிர்த்தெழும்போது அங்கே நான் இருக்க வேண்டும்."

அது எப்படி இருக்கும் என்று நினைக்கும் போது, அதைத் தவறவிடுவது வெட்கமாக இருக்கும்! இந்த பலவீனமான, கெட்டுப்போகும் உடல்கள் திடீரென்று, மகிமையுடன் இயேசுவைப் போன்ற ஒரு சரீரமாக மாற்றப்படும்போது வெளிப்படும் மகிமையையும் வல்லமையையும் நம் வரையறுக்கப்பட்ட மனங்களால் கற்பனை செய்து பார்ப்பது சாத்தியமில்லை. அது எனக்கு அற்புதமானது. நான் அதை நினைக்கும் போது, ஒரு கணம் நிறுத்தி யோசிக்க வேண்டியதாய் இருக்கிறது.

ரோமர் 8 இல், உயிர்த்தெழுதல் நிறைவேறும் வரை இரட்சிப்பு முழுமையடையாது என்றும் பவுல் கூறுகிறார்.

ஆகையால் நமக்குத் தெரிந்திருக்கிறபடி, இதுவரைக்கும் சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவவேதனைப்படுகிறது.

> **அதுவுமல்லாமல், ஆவியின் முதற்பலன்களைப் பெற்ற நாமுங்கூட நம்முடைய சரீரமீட்பாகிய புத்திரசுவிகாரம் வருகிறதற்குக் காத்திருந்து, நமக்குள்ளே தவிக்கிறோம்.**
>
> **ரோமர் 8:22-23**

இதைப் படிக்கும்போது உங்களிடம் ஒரு கேள்வி கேட்கிறேன். உங்களைப் பொறுத்தவரை அது உண்மையா? ஆவியின் முதற்பலன்கள் உங்களிடம் உள்ளன. உங்களுக்குள்ளேயே தவிக்கிறீர்களா? நீங்கள் ஆவலுடன் காத்திருக்கிறீர்களா?

தேவன் நம்மை குறைந்த மட்டத்தில் கையாள்கிறார் என்று நினைக்க உங்களுக்கு அல்லது எனக்கு என்ன உரிமை இருக்கிறது? நாம் சந்தோஷமாயிருப்பதற்கு மட்டுமே பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் நமக்குக் கொடுக்கப்படவில்லை. வரவிருக்கும் காரியங்களுக்கு நம்மை ஆயத்தப்படுத்துவதற்காகவே இது கொடுக்கப்பட்டுள்ளது. இந்த காரியத்தை குறித்து நான் ஆழ்ந்த உணர்வை கொண்டிருக்கிறேன்.

ஒன்றிணைதலின் நிறைவு

உயிர்த்தெழுதல் என்பது இயேசுவோடு நாம் இணைவதன் நிறைவு.

> **பின்பு, உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக மேகங்கள்மேல், அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்.**
>
> **1 தெசலோனிக்கேயர் 4:17**

அந்த கருத்து மிகவும் சுவாரஸ்யமானது, ஏனென்றால் ''காற்று'' என்பதற்கு இரண்டு கிரேக்க வார்த்தைகள் உள்ளன. ஒன்று உயர்ந்த, அரிதான காற்றை விவரிக்கிறது; மற்றொன்று பூமியின் மேற்பரப்புக்கு அருகில் இருக்கும் காற்றை குறிப்பிடுகிறது. இங்கே பயன்படுத்தப்படும் சொல் அந்த கீழ் தளத்தின் காற்றாகும். எனவே நாம் தேவனை சந்திக்க பூமியிலிருந்து வெகுதூரம் செல்ல மாட்டோம்.

அதன் பிறகு, இனி பிரிவினைகள் இருக்காது. நாம் எப்போதும் தேவனுடன் இருப்போம், நாம் எப்போதும் ஒருவரோடு ஒருவர் இருப்போம்.

எனக்கு இரண்டு மனைவிகள் (வெவ்வேறு காலங்களில்!) இருந்தனர். நான் அவர்களை மிகவும் நேசித்தேன், இருவரும் என்னை முந்தி மகிமைக்குள் சென்றனர். ஆனால் ஒரு நாள், நாம் அனைவரும் என்றென்றும் ஒன்றாக இருப்போம்.

அன்புள்ள சகோதர சகோதரிகளே, இதை தவறவிடாதீர்கள். இதை நீங்கள் தவறவிட்டால் அது உங்கள் வாழ்க்கையின் மிகப்பெரிய சோகம் ஆகும். இது ஊக்கமானது மற்றும் தீவிரமானது.

மூன்று கட்டங்களில் உயிர்த்தெழுதல்

இறுதியாக, உயிர்த்தெழுதல் மூன்று கட்டங்களாக இருக்கும்.

ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். அவனவன்

தன்தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான், முதற்பலனானவர் கிறிஸ்து; பின்பு அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள். அதன்பின்பு முடிவு உண்டாகும்; அப்பொழுது அவர் சகல துரைத்தனத்தையும் சகல அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரித்து, தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார்.

1 கொரிந்தியர் 15:22–24

இங்கே மூன்று தனித்தனி கட்டங்களில் வரிசை உள்ளது: முதலில், முதற்பலனாகிய கிறிஸ்து; பின்னர் கிறிஸ்துவின் வருகையில் அவருடையவர்கள்; இறுதியாக முடிவு—மீதமுள்ள மரித்த அனைவரின் இறுதி உயிர்த்தெழுதல்.

யாருக்காக இயேசு திரும்பி வருகிறார்? “கிறிஸ்துவினுடையவர்கள்.” தம்முடையவர்கள் அல்லாதவர்களுக்காக அவர் திரும்பி வரமாட்டார். அவர் திருடன் அல்ல. தனக்குச் சொந்தமில்லாத யாரையும் அவர் எடுத்துக்கொள்ளப் போவதில்லை.

1. கிறிஸ்து முதல் பலன். இந்தச் சூழலில் பழைய ஏற்பாட்டிலிருந்து ஒரு பகுதி மிகவும் உற்சாகமளிக்கிறது. லேவியராகமத்தின் இந்தப் பகுதி மோசேயின் சட்டத்தின் கீழ் ஒரு சடங்கை விவரிக்கிறது.

பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: ’நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: ‘நான் உங்களுக்குக்

கொடுக்கும் தேசத்தில் நீங்கள் போய்ச் சேர்ந்து, அதின் வெள்ளாண்மையை அறுக்கும்போது, உங்கள் அறுப்பின் முதற்பலனாகிய ஒரு கதிர்க்கட்டை ஆசாரியனிடத்தில் கொண்டுவரக்கடவீர்கள். உங்களுக்காக அது அங்கிகரிக்கப்படும்படி, ஆசாரியன் அந்தக் கதிர்க்கட்டை ஓய்வுநாளுக்கு மறுநாளில் கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்ட வேண்டும்.''

லேவியராகமம் 23:9–11

நமது சனிக்கிழமை, நமக்குத் தெரிந்தபடி, யூத ஒய்வு நாளாகும். ஓய்வுநாளுக்கு அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை, இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்த நாள். அவர் முதற்பலனின் கதிர், அவரால் நாம் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதற்காக அவர் நம் சார்பாக அசைவாட்டப்பட்டார்.

ஆனால் இயேசு ஒரே ஒரு தண்டு அல்ல; அவர் ஒரு கதிர்க் கட்டு. மத்தேயு 27:51-53ல் இயேசு மரித்தபோது ஒரு பூகம்பம் ஏற்பட்டது என்று வாசிக்கிறோம். கல்லறைகள் திறக்கப்பட்டு, மரித்த நீதிமான்களில் பலர் எழுப்பப்பட்டு நகரத்திற்குப் புறப்பட்டனர். அவர்கள் மீண்டும் கல்லறைகளுக்குள் செல்லவில்லை. அவர்கள் இயேசுவுடன் சென்றார்கள் என்று நான் நம்புகிறேன். அவர்கள் 'பின்செல்வதற்கு ஒரு திரளான கூட்டம் இருக்கிறது. இதோ இருக்கிறோம்; நாங்கள் கதிர்க் கட்டு. நாங்கள்தான் முதல் பலன்கள்' என்று கூறி கர்த்தருக்கு முன்பாக அசைவாட்டப்பட்ட ''கட்டு'' ஆனார்கள்.'

இயேசுவே முதல் பலனும் நமது உயிர்த்தெழுதலின் உத்தரவாதமாகவும் இருக்கிறார்.

2. கிறிஸ்துவின் வருகையில் அவருடையவர்கள். *இயேசு திரும்பி வரும்போது, அவருடையவர்கள் அவரை வானத்தில் சந்திக்க எடுத்துக்கொள்ளப்பட்டு, என்றென்றும் அவருடன் இருப்பார்கள். பவுல் எழுதுகிறார்:*

> **ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக மேகங்கள்மேல், அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்.**
>
> **1 தெசலோனிக்கேயர் 4:16–17**

3. இறுதியாக, மீதமுள்ள மரித்தவர்கள். *வெளி.20 இல் விவரிக்கப்பட்டுள்ளபடி, பெரிய வெள்ளை சிங்காசனத்தின் தீர்ப்பு உள்ளது. எஞ்சியிருக்கும் மரித்தவர்கள் அனைவரும் தேவனுக்கு முன் தோன்றி அவர்கள் வாழ்ந்த வாழ்க்கைக்கு பதிலளிக்க அழைக்கப்படுவது இதுதான். அப்படியானால், இதுவே இறுதி, பொதுவான உயிர்த்தெழுதல். இது வெளிப்பாட்டை பெற்ற யோவானால் சித்தரிக்கப்பட்டுள்ளது:*

> **பின்பு, நான் பெரிய வெள்ளைச் சிங்காசனத்தையும் அதின்மேல்**

வீற்றிருக்கிறவரையும் கண்டேன்; அவருடைய சமுகத்திலிருந்து பூமியும் வானமும் அகன்றுபோயின; அவைகளுக்கு இடங்காணப்படவில்லை. மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக்கண்டேன்; அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன; ஜீவபுஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது; அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள். சமுத்திரம் தன்னிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தது; மரணமும் பாதாளமும் தங்களிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தன. யாவரும் தங்கள் தங்கள் கிரியைகளின்படியே நியாயத்தீர்ப்படைந்தார்கள்.

வெளி. 20:11–13

நீங்கள் இதைப் படிக்கும்போது நான் உங்களுக்கு சவால் விட விரும்புகிறேன். நீங்கள் உண்மையிலேயே இலக்கை நோக்கி தொடருகிறீர்களா? உங்கள் வாழ்க்கையில் சரியான முன்னுரிமைகள் உங்களுக்கு உள்ளதா?

அதைச் சரி செய்வதற்கான ஒரு வாய்ப்பை உங்களுக்கு முன்வைக்க விரும்புகிறேன்.

நீங்கள் வாழ வேண்டிய விதத்தில் நீங்கள் வாழவில்லை என்பதை நீங்கள் உண்மையிலேயே அறிந்திருந்தால், நீங்கள் இயேசுவுக்காக ஆவலுடன் காத்திருக்கவில்லை என்றால், நீங்கள் மாற வேண்டிய நேரம் இது. நினைவில் கொள்ளுங்கள், மனந்திரும்புதல் என்பது ஒரு

முடிவை தொடரும் ஒரு செயல். மனந்திரும்புதல் தேவைப்பட்டால், அதைச் செய்ய இதுவே நேரம். நான் எப்பொழுதும் சொல்வேன், “நீங்கள் விரும்பும் போது மனந்திரும்ப முடியாது; பரிசுத்த ஆவியானவர் உங்களைத் தூண்டினால் மட்டுமே நீங்கள் மனந்திரும்ப முடியும்.”

நீங்கள் சரியாக வாழவில்லை என்று பரிசுத்த ஆவியானவர் சொல்வதை நீங்கள் உணரலாம். நீங்கள் அவருடைய வருகையை எதிர்பார்த்தால், இருக்க வேண்டிய மனநிலை உங்களுக்குள் இல்லை.

நீங்கள் அதைச் சரி செய்ய விரும்பினால், நான் இப்போது உங்களுக்கு சவால் விட விரும்புகிறேன், அதற்கான வாய்ப்பை உங்களுக்கு வழங்க விரும்புகிறேன். உங்களைத் தாழ்த்தி இந்த ஜெபத்தை ஜெபிக்க உங்களை அழைக்க விரும்புகிறேன்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே, எங்கள் இரட்சிப்பின் காரணர் நீரே. நீர் மரித்தோரிலிருந்து எழுந்த முதல் பலன். நீர் எங்களுக்காக பரிந்துபேசுபவராய் பரலோகத்தில் இருக்கிறீர். நீர் இப்போது எங்களுக்காகப் பரிந்து பேசும் பிதாவின் வலது பக்கத்தில் இருக்கிறீர். நீர் ஜீவிப்பதால் நாங்களும் ஜீவிப்போம்.

ஆண்டவரே, உமது துரிதமான வருகையின் காலத்தை நான் சிந்திக்கும்போது, நான் வாழ வேண்டிய விதத்தில் வாழவில்லை என்பதை நான்

உணர்கிறேன். தேவனே, இப்போது இயேசுவின் நாமத்தினால் உமது ஆவியை என் மீது ஊற்றுவீரா? நான் என் இதயத்திலிருந்து உம்மை நோக்கி கூப்பிட கிருபை மற்றும் மன்றாட்டின் ஆவியை ஊற்றுவீரா?

தேவனே கிருபையாய் இரும். நான் இயேசுவின் வருகையைப் பற்றி ஒரு சாதாரண மனப்பான்மையைக் கொண்டிருந்தேன், அவர் திரும்பி வருவார் என்ற எதிர்பார்ப்பில் என்னைத் தூய்மைப்படுத்தும் விதத்தில் நான் வாழவில்லை என்பதை நான் உணர்கிறேன். இந்த நாளில் நான் என்னை மறுபடியும் உமக்குக் கொடுக்கிறேன்.

என் பார்வையை மறைத்து, என் இதயத்தைப் பிளவுபடுத்தும் விஷயங்களை என் இதயத்திலிருந்தும் வாழ்க்கையிலிருந்தும் அகற்றவும், இதனால் நான் முழு எதிர்பார்ப்புடன் இயேசுவின் வருகையை எதிர்பார்க்கவும் செய்யும். இயேசுவின் நாமத்தில்,

ஆமென்.

நம்முடைய கர்த்தரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் வருகைக்காக நீங்கள் காத்திருக்கும்போது தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!

எழுத்தாளரைப் பற்றி

டெரிக் பிரின்ஸ் (1915–2003) பிரிட்டிஷ் பெற்றோருக்கு இந்தியாவில் பிறந்தார். இங்கிலாந்தின் ஈட்டன் கல்லூரி மற்றும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கிரேக்கம் மற்றும் லத்தீன் மொழி அறிஞராகப் படித்த அவர், கிங்ஸ் கல்லூரியில் பண்டைய மற்றும் நவீன தத்துவத்தில் பெல்லோஷிப்பைப் பெற்றார். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் மற்றும் ஜெருசலேமில் உள்ள எபிரேய பல்கலைக்கழகத்தில் எபிரேய மற்றும் அராமிய மொழிகளை உள்ளிட்ட பல நவீன மொழிகளைக் கற்றார்.

இரண்டாம் உலகப் போரில் பிரிட்டிஷ் ராணுவத்தில் பணியாற்றிய போது, அவர் வேதத்தைப் படிக்கத் தொடங்கினார் மற்றும் இயேசு கிறிஸ்துவுடன் ஒரு வாழ்க்கையை மாற்றும் அனுபவத்தைப் பெற்றார். இந்த சந்திப்பில் இருந்து அவர் இரண்டு முடிவுகளுக்கு வந்தார்: முதலில், இயேசு கிறிஸ்து உயிருடன் இருக்கிறார்; இரண்டாவதாக, பைபிள் ஒரு உண்மையான, பொருத்தமான, தற்காலத்திற்கு ஏற்ற புத்தகம். இந்த முடிவுகள் அவருடைய வாழ்க்கையின் முழு போக்கையும் மாற்றியது, பின்னர் அவர் பைபிளைப் படிப்பதிலும் கற்பிப்பதிலும் தன்னை அர்ப்பணித்தார்.

பைபிளையும் அதன் போதனைகளையும் தெளிவாகவும் எளிமையாகவும் விளக்கும் டெரிக்கின் முக்கிய வரம், மில்லியன் கணக்கான உயிர்களில் நம்பிக்கையின் அடித்தளத்தை உருவாக்க உதவியது. அவரது சபை பிரிவு சார்பற்ற, பிரிவினைவாதம் இல்லாத அணுகுமுறை அவரது போதனையை அனைத்து இன மற்றும் மத பின்னணியிலிருந்தும் மக்களுக்குச் சமமாக பொருத்தமானதாகவும் பயனுள்ளதாகவும் ஆக்கியுள்ளது.

அவர் 80க்கும் மேற்பட்ட புத்தகங்கள், 600 ஆடியோ மற்றும் 110 வீடியோ போதனைகளின் ஆசிரியர் ஆவார், அவற்றில் பல, 100க்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. அவரது தினசரி வானொலி ஒலிபரப்பு அரபி, சீன (அமோய், கான்டோனீஸ், மாண்டரின், ஷாங்காயீஸ், ஸ்வாடோ), குரோஷியன், ஜெர்மன், மலகாஸி, மங்கோலியன், ரஷ்யன், சமோவான், ஸ்பானிஷ், பஹாசா இந்தோனேசிய மற்றும் டோங்கன் மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. வானொலி நிகழ்ச்சி தொடர்ந்து உலகம் முழுவதும் பலரைச் சென்றடைகிறது.

டெரிக் பிரின்ஸ் மினிஸ்ட்ரீஸ் அவரது போதனைகளுடன் 140க்கும் மேற்பட்ட நாடுகளில் உள்ள விசுவாசிகளை சென்றடைவதைத் தொடர்கிறது, ‘இயேசு திரும்பும் வரை’ தொடர வேண்டும் என்ற ஆணையை நிறைவேற்றுகிறது. ஆஸ்திரேலியா, கனடா, சீனா, பிரான்ஸ், ஜெர்மனி, இந்தியா, இந்தோனேஷியா, மலேசியா, மியான்மர், நேபாளம், நெதர்லாந்து, நியூசிலாந்து, நார்வே, பாகிஸ்தான், ரஷ்யா, தென்னாப்பிரிக்கா, சுவிட்சர்லாந்து, யுனைடெட் கிங்டம், அமெரிக்கா மற்றும் பசிபிக் தீவுகள் ஆகிய நாடுகளில் உள்ள முதன்மைப் பணிகள் உட்பட, உலகெங்கிலும் உள்ள 30க்கும் மேற்பட்ட டெரிக் பிரின்ஸ் அலுவலகங்கள் மூலம் இது செயல்படுத்தப்படுகிறது. இவை மற்றும் பிற உலகளாவிய இருப்பிடங்களைப் பற்றிய தற்போதைய தகவலுக்கு,

இங்கு செல்க:www.derekprince.com

உங்கள் ஜெப விண்ணப்பங்கள் அனுப்ப, புத்தகங்கள் வாங்க மற்றும் இதர காரியங்களுக்கு நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

For orders, prayer requests & other enquiries please contact :

DERBK PRINCE MINISTRIES - INDIA
C/o DPM EXIM
A-40, Anna Nagar Main Road,
Sivapragasam Salai, Tennur,
Trichy - 620 017, Tamil Nadu, India.
E-mail: admin@derekprince.in
Phone : 00-91-98430 55414 / 95855 38201

உங்கள் காணிக்கைகளையும், நன்கொடைகளையும் மேலிருக்கும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

You can also send your offerings and contributions towards this ministry to the above address.

Visit our WEBSITE:

www.derekprince.com/ta